# செந்தமிழ்

தொகுதி : 95 திருவள்ளுவர் ஆண்டு 2032 சனவரி 2001 பகுதி : 1

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் இரா. **அழகுமலை** எம்.ஏ., எம்.பில்.,
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1.

ஆசிரியர்

**பேரறிஞர் நா. பாலுசாமி**

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. | 60 | ரூ. | 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. | 500 | ரூ. | 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 1000 | ரூ. | 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. | 6 | | |


ஆசிரியர்

**பேரறிஞர் நா. பாலுசாமி**

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பிஎச்.டி.,

# பொருளடக்கம்

1. *எல்லோர்க்கும் தொல்காப்பியம்* .................................. 2
பேரறிஞர் நா. பாலுசாமி

2. சாதி சமயங்களுக்கு அப்பாற்பட்டவர் வள்ளுவர் ....... 10
அறிஞர். க சி. அகமுடை நம்பி

3. வழக்காற்றில் 'செல்' - 'போ' என்னும்
கிளவிகளின் வேறுபாடுகள் ...................................... 16
புலவர் சி பாண்டுரங்கன்

4. திருவள்ளுவரைத் தெரிந்து கொள்ளுங்கள் ............... 23
நாபா

5. தனிப்பாடல்கள் திரட்டும் பதிப்பும் ............................ 32
மொ மருதமுத்து

# மதுரைத் தமிழ்ச் சங்கம்
# செந்தமிழ் திங்கள் இதழ்

## ஆண்டுக் கட்டணம்

### தமிழ் ஆசிரியப் பெருமக்களுக்கு
### அன்பான வேண்டுகோள்

------

பேரன்புடையீர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்தும் செந்தமிழ் மாத இதழுக்குரிய ஆண்டுக் கட்டணம் (2001) ரூ.60/- அருள் கூர்ந்து அனுப்புமாறு வேண்டுகிறோம். பணவிடையாகவோ (M.O.) கேட்புவரைவு ஓலையாகவோ (D.D.) செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 625 001 என்னும் முகவரிக்கு அனுப்பவும். நன்றி.

**ஆசிரியர்**

மதுரை
8.1.2001

**(செயலாளருக்காக)**

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

(எழுத்து - மொழி மரபு)

59. (மொழிமுதல் எழுத்துக்கள்)

**பன்னீ ருயிரும் மொழிமுதல் ஆகும்**

(பொ-ரை) சொல்லுக்கு முதலில் 12 உயிரெழுத்துக்களும் நிற்கும்.

(எ-டு) அணி, ஆணி, இலை, ஈகை, உலகம், ஊக்கம், எட்டு, ஏடு, ஐயர், ஒலி, ஓணான், ஔவியம் (பொறாமை)

60. **உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா.**

(பொ-ரை) உயிர்மெய் எழுத்துக்கள் தவிர்ந்த தனி மெய்யெழுத்துக்கள் மொழிக்கு முதலில் நிற்கா. உயிரேறிய மெய்தான் மொழிமுதல் ஆகும்.

(எ-டு.) (க் - தனி மெய்; க - உயிர் ஏறிய உயிர்மெய். க் + அ = க)

61. **கதந பமஎனும் ஆவைந்து எழுத்தும்**
**எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே.**

(பொ-ரை) க், த், ந், ப், ம் ஆகிய ஐந்து தனி மெய்யெழுத்துக்களும், 'அ' முதல் 'ஔ' முடிய உள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துக்களுடன் கூடி மொழிக்கு முதலில் வரும். மார் - அசைச்சொல்

(எ-டு.) க் - கலை, காளி, கிளி, கீரி, குடி, கூடு, கெண்டை, கேழல், கை, கொடை, கோடை, கௌதாரி. (கேழல் - பன்றி; கௌதாரி - ஒரு பறவை)

த் - தந்தை, தாய், திசை, தீமை, துணி, தூறு, தென்னை, தேவர், தையல், தொண்டை, தோடு, தௌவை. (தௌவை - தமக்கை, அக்கா).

ந் - நம்பி, நாடு, நிலம், நீர், நுழைவு, நூல், நெய், நேயம், நைதல், நொடி, நோட்டம், நௌவி. (நௌவி - மான்)

ப் - படை, பாட்டு, பிடி, பீடம், புனல், பூ, பை, பொன், போது, பௌவம் (போது - மலர், காலம்; பௌவம் - கடல்)

ம் - மடை, மான், மிடி, மீட்பு, முகம், மூக்கு, மெலிவு, மேன்மை, மை, மொழி, மோர், மௌலி (மிடி - வறுமை; மௌலி - கிரீடம்)

குறிப்பு: மேலே கண்ட ஐந்து மெய்யெழுத்துக்கள் தவிர்ந்த பிற மெய்களுக்குத் தனிச் சூத்திரங்கள் உள்ளன.

62. (சகரமெய்)

**சகரக் கிளவியும் அவற்றோர் அற்றே**
**அ ஐ ஔஎனும் மூன்றலம் கடையே.**

(ப-ரை) அ,ஐ,ஔ என்னும் மூன்றும் - அ, ஐ, ஔ எனப்பட்ட மூன்று உயிரெழுத்துக்களும், அல் அம் கடை - அல்லாத இடத்து, சகரக் கிளவியும் 'ச்' என்னும் மெய்யும், அவற்றோர் அற்று - மேலே சொல்லப்பட்டவற்றைப் போல எல்லா உயிரோடும் சொல்லுக்கு முதலில் வரும். (கடை - இடம்; அற்று - அதுபோன்றது; கிளவி - எழுத்து)

(பொ-ரை) 'ச்' என்னும் மெய் அ, ஐ, ஔ என்ற மூன்று உயிர்கள் ஒழிந்த ஏனைய ஒன்பது உயிர்களோடும் மொழிக்கு முதலாகும்.

(எ-டு.) ச, சை, சௌ - இம்மூன்றும் தமிழ் மொழிக்கு முதலில் வாரா என்பதாம்.

சகடம், சைவம், சௌமியம் - இவை வட சொற்கள். ஆனல், பிற உயிர்களோடு சேர்ந்து, சாலை, சிலை, சீற்றம், சுரும்பு, சூழ்ச்சி, செயல், சேர்க்கை, சொல், சோறு என வரும்

குறிப்பு: 'ச' என்னும் எழுத்து தமிழில் சொல்லுக்கு முதலில் வாராது என்பது முற்றிலும் பொருந்தாது. சங்கம், சனி, சளி, சங்கு, சரக்கு முதலியன நல்ல எளிய தமிழ்ச்சொற்களாம்.

சை, சௌ - (சைகையும் தமிழ்ச்சொல்லே)

சௌகர்யம் - இது வடசொல். எனவே 'ஔ' என்னும் ஓர் உயிரொடு மட்டும் சகரம் வாராது எனக் கொள்ளல் வேண்டும். இச்சூத்திரத்திற்குப் பாட வேறுபாடும் உண்டு என்பர்.

63. (வகரமெய்)

**உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிர்**
**வஎன் எழுத்தொடு வருதல் இல்லை**

(பொ-ரை) உ, ஊ, ஒ, ஓ என்னும் நான்கு உயிர் எழுத்துக்களும் 'வ்' என்னும் மெய் ஊர்ந்து சொல்லுக்கு முதலில் வாராவாம். அஃதாவது, வு,

ஞூ, வொ, வோ என்ற நான்கு உயிர்மெய் எழுத்துக்கள் சொல்லுக்கு **முதலில்** வாரா. பிற உயிர்களை ஏற்று முதலில் வரும்.

(எ-டு.) வரி, வாளி, விளிம்பு, வீடு, வெள்ளி, வேர், வையம் என வரும்.

64. (ஞகர மெய்)

**ஆஎ**
**ஒஎனும் மூவுயிர் ஞகாரத்து உரிய**

(பொ-ரை) 'ஞ்' என்னும் மெய்யின்மேல் ஆ, எ, ஒ என்னும் மூன்று உயிர்களும் பொருந்தி முதலில் வரும். அஃதாவது, ஞா, ஞெ, ஞொ இம்மூன்று உயிர்மெய்களும் சொல்லுக்கு முதலில் வரும். பிற உயிர்களைச் சார்ந்து 'ஞ்' வாராது.

(எ-டு.) ஞாலம், ஞெண்டு, ஞொள்கிற்று எனவரும்.

65. (யகரமெய்)

**ஆவோடு அல்லது யகரம் முதலாது.**

(பொ-ரை) 'ய்' என்னும் மெய்யெழுத்து 'ஆ' என்னும் ஓர் உயிரெழுத்தோடு மட்டும் கூடி மொழிக்கு முதலில் வரும். பிற உயிர்களோடு வாராது.

(எ-டு) யான், யார், யாது என வரும். யவனர் என 'அ' என்பதனோடு வருமோ என்றால், அச்சொல் ஆரியச் சொல்லின் சிதைவு எனத் தள்ளுக.

66. **முதலா ஏன தம்பெயர் முதலும்**

(ப-ரை) முதலா ஏன - மொழிக்கு முதலில் வாரா என ஒழிந்த மெய்களும், தம்பெயர் முதலும் - தம்பெயர் கூறுமிடத்து முதலில் வரும்.

அஃதாவது, எல்லா மெய்யெழுத்துக்களும் (க் முதல் ன் வரையுள்ள பதினெட்டு மெய்களும்) தத்தம் பெயரைச் சுட்டும் போது மொழி முதல் வரும்.

(எ-டு.) ஙகரம், டகரம், லகரம், ளகரம் என்பன போன்றவை.

குறிப்பு : மொழிக்கு முதலில் வாரா எனப்பட்ட ஒன்பது மெய்யெழுத்துக்களும் (ட், ற், ங், ண், ன், ர், ல், ள், ழ்) மொழிக்கு முதலில் வரும் எனப்பட்ட ஒன்பது மெய்யெழுத்துக்களும் (க்,

ச், த், ப், ஞ், ந், ம், ய், வ்) தத்தம் பெயர்களைச் சுட்டிவரும்போது மொழி முதல் எழுத்துக்களாம். பன்னிரண்டு உயிர்எழுத்துக்களும் மொழிமுதல் எழுத்துக்கள் என்பது முன் சுட்டப்பட்டது.

67. (மொழிமுதல் குற்றியலுகரம்)

**குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கில்**
**ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்**

(ப-ரை) முறைப் பெயர் மருங்கில் - உறவு குறித்து வரும் முறைப் பெயரிடத்து, குற்றியலுகரம் (அரைமாத்திரையாகக் குறுகி ஒலிக்கும்) குற்றியலுகரம், ஒற்றிய நகர மிசை - தான் சேர்ந்துள்ள நகர மெய்யின் மேலுள்ள, நகரமொடு - நகரமெய்யோடு, முதலும் - மொழிக்கு முதலில் வரும்.

குற்றியலுகரம் மொழிக்கு முதலில் வாராது என்பது விதி. ஆனால் முறைப்பெயரின்கண் 'ந்' என்னும் ஒற்றின்மேல் ஏறி 'நு' என்னும் உயிர்மெய்யாகி மொழிக்கு முதலில் வரும் என்பது இந்நூற்பாவின் கருத்து.

(எ-டு.) நுந்தை (உன் தந்தை) - இதில் 'ந்' என்னும் ஒற்றின் மேல் 'உ' ஏறிக் குற்றுகரம் மொழிமுதல் வந்தமை காண்க. இங்கு முதல் நகரம் பற்றுக்கோடு; இரண்டாவது சார்பு.

68. **முற்றியல் உகரமொடு பொருள்வேறு படாஅது**
**அப்பெயர் மருங்கில் நிலையியல் ஆன.**

(ப-ரை ) அ பெயர் மருங்கில் - அந்த முறைப்பெயரின்கண் நிலைஇயல் ஆன - தான் நிற்கும்போது, முற்றியல் உகரமொடு - (ஒரு மாத்திரை ஒலிக்கும்) முற்றுகரத்தோடு, பொருள் வேறு படாது - பொருளில் வேறுபடாமல் இருக்கும்.

முறைப் பெயராகிய நுந்தை என்பதில் முதலில் நகர மெய்யின்மேல் நிற்கும் உகரம் குற்றியல் உகரமேனும், இதழ் குவியாமல் ஒலிக்கும் முற்றுகரத்தின் பொருளையே தரும் என்பதாம்

உரையாசிரியராகிய இளம்பூரணர் இவ்வாறு கூறியுள்ளார். ஆனால் நச்சினார்க்கினியர், காது,கட்டு, கத்து, முருக்கு என்பனவற்றின் ஈற்றில் வல்லின மெய்களின் மேல் ஏறி நின்ற உகரம், இதழ் குவித்து ஒலிக்கும்போதும் இதழ் குவியாது ஒலிக்கும்போதும் பொருள் வேறுபடுமாறு போல, நுந்தை என்பதின் முன்னுள்ள உகரம் குவித்துக் 71.

கூறினும் குவியாமல் கூறினும் பொருள் வேறுபடாமை கண்டு கொள்க. இதனால் பெறப்படுவது:

குற்றியலுகரத்தை இதழ் குவித்து உச்சரிக்கும்போது முன்னிலை வினையாகவும், குவியாது உச்சரிக்கும்போது தொழிற் பெயராகவும் பொருள் வேறுபடும் என்பது உணர்க.

(எ-டு.) நாடு (ஊர்) - குற்றியலுகரம் (பெயராதல்)
நாடு (ஆராய்க) - முற்றியலுகரம் (வினை)

முதல் எடுத்துக்காட்டில் இதழ் குவியாது; பின்னதில் குவியும்.

குறிப்பு: இதுகாறும் கூறியவாற்றால் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துக்கள் | -12 | (அ-ஔ) |
| உயிர் மெய்யெழுத்துக்கள் (வல்லினம்) | - 4 | (கசதப) |
| மெல்லினம் | - 3 | (ஞநம) |
| இடையினம் | - 2 | (ய,வ) |
| முறைப்பெயர் முதல் குற்றுகரம் | - 1 | (நுந்தை) |

(ஆக, மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் மொத்தம் 22)

69. (மொழி இறுதி எழுத்துக்கள்)

**உயிர்ஔ எஞ்சிய இறுதி ஆகும்.**

(பொ-ரை) உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டனுள் 'ஔ' என்னும் உயிர்நெடில் மொழிக்கு ஈற்றில் வாராது. பிற உயிர்கள் பதினொன்றும் ஈற்றில் நிற்கும்.

(எ-டு) ஆ ஈ ஊ ஏ ஐ ஓ - இந்த ஆறு உயிர்நெடில் எழுத்துக்களும் ஓரெழுத்து ஒரு மொழிகள். ஆகவே மொழிக்கு முதலிலும் வரும்; ஈற்றிலும் வரும் என்பது வெளிப்படை. இனி, அ, இ, உ, எ, ஒ - இவ்வைந்து உயிர்க்குறில்கள் அளபெடையில் மொழிக்கு ஈறாகும். அவை ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ.

70. (ஔ ஈற்றில் வரும் இடம்)

**கவவோடு இயையின் ஔவும் ஆகும்.**

(பொ-ரை) 'க்', 'வ்' என்னும் மெய்களோடு சேர்ந்து 'ஔ' என்பதும் மொழிக்கு ஈற்றில் வரும்.

(எ-டு) க் + ஔ = கௌ, வ + ஔ = வௌ (கௌவுதல் வௌவுதல்)

**எ என வரும் உயிர் மெய்யீறு ஆகாது.**

(பொ-ரை) 'எ' என்னும் உயிர்க்குற்றெழுத்து, அளபெடையில் தானே ஈறாகுமே அல்லாமல், எந்த மெய்யோடு சேர்ந்தும் ஈறாகாது.

(எ-டு.) ஏஎ - அளபெடை.

## 72. ஒவ்வும் அற்றே நவ்வலம் கடையே

(பொ-ரை) 'ஒ' என்னும் உயிர்க்குறிலும் 'ந்' என்னும் மெய்யுடன் சேர்ந்தல்லது தானே ஈற்றில் வாராது.

(எ-டு.) ந் + ஒ = நொ (நொந்து). அளபெடையிலும் வரும். ஓஒ - அளபெடை.

## 73. ஏஓ எனும்உயிர் ஞகாரத்து இல்லை.

(பொ-ரை) ஏ,ஓ, என்னும் இரண்டு உயிர்நெட்டெழுத்துக்களும், தாமே நின்றும் பிறமெய்யெழுத்துக்களுடன் சேர்ந்தும் மொழிக்கு ஈற்றில் வருமேயன்றி ஞகர மெய்யுடன் கூடி ஈறாகாது

(எ-டு.) உரிஞ, உரிஞா எனவும், அஞ்ஞை, மஞ்ஞை எனவும் வரும்.

## 74. உ ஊ காரம் நவவொடு நவிலா

(பொ-ரை) உ, ஊ என்னும் இரண்டு உயிரெழுத்துக்களும் நகர (ந்), வகர (வ்) மெய்களோடு வாரா. இவை இரண்டு மெய்களும் தாமே நின்றும் பிறமெய்களோடு சேர்ந்தும் இறுதியில் நிற்கும் ஏனைய மெய்களோடு கூடிவரும்.

மற்ற உயிர் எழுத்துக்கள் நகர வகர மெய்களோடு வரும் என்பது பெறப்பட்டது.

(எ-டு.) பொருந, நா, நீ, நே எனப் பெயராகவும், நை, நொ, நோ என வியங்கோள் வினையாகவும் ஒருவ, ஒருவா, ஒருவி, ஒருவீ, ஔவை - இவ்வாறு பிற உயிர்களோடு வகரம் வந்தமை காண்க.

## 75. உச்ச காரம் இருமொழிக்கு உரித்தே

(பொ-ரை) உகரத்தோடு கூடிய சகரம் (ச் + உ = சு) என்பது இரண்டு மொழிகளில் மட்டில் வரும். (எ-டு.) உசு, முசு. பசு என்பது ஆரியச் சிதைவு என்பர். உசு - ஒருவகைப் புழு. முசு - குரங்கு.

## 76. உப்ப காரம் ஒன்றெனமொழிப

**இருவயின் நிலையும் பொருட்டா கும்மே.**

(பொ-ரை) உகரத்தோடு கூடிய பகரம் (ப் + உ = பு) ஒரே ஒரு மொழியில் மட்டும் ஈறாகும், அது தன்வினை, பிறவினை என்னும் ஈரிடத்தும் நிலைபெறும் தன்மைத்து.

(எ-டு ) தபு என வரும் இச்சொல்லைப் படுத்து (தாழ்த்தி)க் கூறினால், நீசா (செத்துப்போ) எனத் தன் வினையாம்; எடுத்து (உயர்த்தி)க் கூறினால், ஒன்றனை நீசாவி (சாகப்பண்ணு) எனப் பிற வினையாம். இவ்வாறு தபு என்னும் வினைச்சொல் அழுத்த வேறுபாட்டால் இருவகைப்பொருளைத் தருவது உணர்க.

## 77. எஞ்சிய எல்லாம் எஞ்சுதல் இலவே

(ப-ரை) எஞ்சிய எல்லாம் - (மொழிக்கு ஈற்றில் நிற்காது) எஞ்சி நிற்கும் உயிர்மெய்கள் எல்லாம், எஞ்சுதல் இல - தத்தம் பெயர்களைச் சுட்டும்போது ஈறாவதற்கு விலக்கில்லை; ஈறாகும் என்பதாம்.

முன் சூத்திரங்களில் மொழிக்கு ஈறாகாதவை எனக் கூறப்பட்ட உயிர்மெய்கள் எல்லாம் தத்தம் பெயரைத் தனித்துச் சுட்டும்போது ஈறாகி நிற்கும்.

இனி, முற்கூறியவற்றுள் சிறப்பாக எடுத்துச் சுட்டப்பட்ட ஔ, எ, ஒ, ஏ, ஓ, உ, ஊ என்ற ஏழு உயிர்கள் அல்லாத அ, ஆ, இ, ஈ, ஐ என்ற ஐந்து உயிர்எழுத்துக்களும் ஙகரம் ஒழிந்த எல்லா மெய்களோடும் கூடி ஈறாகும் என்பது பெறப்படும்.

(எ-டு.) பக, பச, பட, அண, புத, தப, கம, துய, துர, பல, தவ, மழ, உள, பிற, அன்ன என வரும். பிறவற்றிற்கும் இவ்வாறே கண்டு கொள்க.

78. (ஈற்றில் வரும் மெய்கள்)

**ஞணநம னயரல வழள என்னும்**
**அப்பதி னொன்றே புள்ளி இறுதி.**

(பொ-ரை) ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய பதினொரு மெய்யெழுத்துக்களும் மொழிக்கு ஈற்றில் நிற்றற்கு உரியனவாம். பிற புள்ளி எழுத்துக்களாகிய க் ச் ட் த் ப் ற் ஆறு வல்லினமும், ங் என்னும் ஒரு மெல்லினமும் ஆகிய ஏழு புள்ளி எழுத்துக்களும் மொழிக்கு ஈற்றில் நிற்கா என்பதாம்

(எ-டு.) உரிஞ், மண், பொருந், திரும், பொன், வேய், வேர், வேல்,

தெவ், வீழ், வேள் என வரும்.

**79. உச்ச காரமொடு நகாரம் சிவணும்**

(பொ-ரை) உகரத்தோடு கூடிய சகர ஒற்று இரண்டு மொழிகளுக்கு ஈறாகியது போல, நகர ஒற்றும் (ந்) இருமொழிக்கு ஈறாகும். ஒடு என்பது உவம உருபு.

(எ-டு.) பொருந், வெரிந் (முதுகு)

**80. உப்பகாரமொடு ஞகாரையும் அற்றே
அப்பொருள் இரட்டாது இவணை யான.**

(பொ-ரை) உகரம் பகர ஒற்றோடு கூடி ஒருமொழியில் இருபொருள் பட்டதுபோல் அன்றி, ஞகர ஒற்று(ஞ்) ஒருமொழியில் மட்டும் ஈற்றில் நிற்கும்; ஆனால் பகர ஒற்றுப்போல இருபொருள் படாது. (ஒடு - போல) உவம உருபு.

(எ-டு.) உரிஞ் என ஒருமொழியில் மட்டுமே வரும்.

**84. வகரக் கிளவி நான்மொழி ஈற்றது.**

(பொ-ரை) வகர ஒற்று(வ்) நான்கு மொழிகளில் மட்டும் ஈற்றில் நிற்கும்.

(எ-டு.) அவ், இவ், உவ், தெவ்(பகை) எனவரும்.

82. (அஃறிணையில் னகர ஈற்றுமொழிகள்)

**மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன.**

(பொ-ரை) குற்றமறக் கூறப்பட்ட அஃறிணையில், மகர ஈற்றுத்தொடர் மொழியோடு மயங்காது எனப்பட்ட னகர ஈற்றுத் தொடர்மொழி ஒன்பதாம். அஃதாவது, மயங்காது 'ன்' என்று முடியும் தொடர்மொழிகள் ஒன்பதேயாம்.

(எ-டு.) நிலன் - நிலம், பிலம் - பிலன், அறம் - அறன் என்றாற் போல வருவன மயங்குவன.

மயங்காதன : உகின், செகின், விழன், பயின், அழன், புழன், குயின், கடான், வயான் என்பனவாம். இவை மகரமெய்யொடு மயங்கா.

*(தொடரும்...)*

# சாதி சமயங்களுக்கு அப்பாற்பட்டவர் வள்ளுவர்

**அறிஞர். கு.சி. அகமுடை நம்பி**

பொதுமை அறம் பூண்டு, புகழ்புரிந்த பாவலர் வள்ளுவர். மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து இறைமை நிலைக்கு உயர்தல் வேண்டும் என்ற பெருநோக்கில், திருக்குறளை அவர் நமக்கு வழங்கியுள்ளார்.

வள்ளுவர் எந்த ஊரில் பிறந்தார். என்ன தொழில் செய்து வாழ்ந்தார், அவரது வாழ்வுநிலை எந்த மட்டத்தில் இருந்தது என்பன போன்ற எந்தத் தகவலையும் அவர் நமக்கு விட்டுச் செல்லவில்லை. அவரைப் பற்றி நமக்குக் கிடைத்துள்ள செய்திகள் யாவும் கற்பனைப் புனைவுகளே; நம்பத்தக்க உண்மைகளல்ல. திருக்குறள் தமிழ் மொழியில் இருப்பதால், வள்ளுவர் தமிழர் என்று அறிந்து கொள்கிறோம். இருபதாம் நூற்றாண்டில், உலகளாவிய புகழுடன் வாழ்ந்து சென்ற மெய்ப்பொருளறிஞர், ஜெ கிருஷ்ணமூர்த்தி, மனித வாழ்க்கை எப்படி அமைந்திருந்து முடிவு காணவேண்டும் என்ற கேள்விக்கு, 'வானத்தில் ஒரு பறவை பறந்து செல்கிறதே, அது பறந்து சென்றதற்கு வழியில் ஏதேனும் ஒரு தடயத்தை விட்டுச் செல்கிறதா? இல்லையே. அதுபோல் மனித வாழ்வு அமைந்து முடிய வேண்டும்' என்பார். வள்ளுவரது வாழ்க்கை அவ்வாறு அமைந்தது என்று கொள்ளலாம்.

வள்ளுவம் குறள் வெண்பாவில் இருப்பதால் அதனைத் திருக்குறள் என்றழைக்கிறோம். வள்ளுவன் என்ற பெயர்கூட, ஓர் இடுகுறிப்பெயராகத்தான் தோன்றுகிறது. அதனுடன் 'திரு'வைச் சேர்த்துத் திருவள்ளுவர் என்கிறோம். அவர் எந்த ஒரு சமயத்தையும் சாராதவர். எந்த ஒரு சமயத்தின் கடவுளையும் அவர் உருவகப்படுத்திக் காண்பிக்கவில்லை. பல்வேறு சமயத்தவர்கள் திருவள்ளுவரைத் தத்தமது சமயத்தைச் சேர்ந்தவர் என்று உரிமை கொண்டாடுகின்றனரே என்றால், எல்லாச் சமயத்தவர்க்கும் அவர் ஏற்புடையவராக இருக்கிறார் என்பதே மெய்மை நிலை. சமயம் என்ற சொல்லுக்கோ சாதி என்ற சொல்லுக்கோ வள்ளுவத்தில் இடமில்லை. சாதி சமயங்களுக்கு அப்பாற்பட்டவர் வள்ளுவர். 'உலகு-உலகு' என்றே அவரது நெஞ்சம் ஒலித்துக் கொண்டிருந்தது. அவர் ஓர் உலகப் பாவலர். டாக்டர்.ஜி.யூ.போப்

கூறியபடி, திருவள்ளுவர் பிரபஞ்ச மனிதனின் பாடகர் (Bard of the Universal man)

**பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்**

என்ற குறள், 'பெருமை' அதிகாரத்தில் உள்ளது. இக்குறளை நம்மில் பலர், உள்ளது உள்ளபடி புரிந்து கொள்ளாமல் இருக்கிறோம் தற்போது நம்மிடையே நிலவி வருகின்ற சாதிப்பிரிவுகளை இக்குறள் மூலம், வள்ளுவர் மறுத்து ஒதுக்குகிறார் என்று பொருள் கொண்டு, சாதிப் பிரிவுகளுக்கு எதிராக இக்குறளை மேற்கோளாகக் குறிப்பிட்டு வருகிறோம். ஆனால், இந்தக் குறளில் சாதியைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. 'எல்லா உயிர்களுக்கும் - ஊர்வன, பறப்பன, நீர் வாழ் உயிர்கள், விலங்குகள், மனிதர்கள் போன்ற அனைத்துயிர்களுக்கும் பிறப்பு என்பது ஒரே தன்மையானது. (இறப்பும் ஒரே தன்மையானது என்பது இங்கு உள்ளடக்கம்) எல்லா உயிர்களுக்கும் பிறப்பு இறப்பு ஆகிய நிகழ்வுகள் ஒரே தன்மையானவை. எந்த உயிரினமும் இதற்கு விதிவிலக்கில்லை. ஆனால், ஒவ்வோர் உயிரின் சிறப்பு, அதனதன் தொழில் வேறுபாட்டின் காரணமாக வேறுபடும்' - இதுதான் இக்குறளின் மெய்யான பொருள்

இக்குறளுக்கு ஓர் அன்பர் (தினமணி 25.11.2000 வாசகர் கடிதம்), 'எவ்வாறு உயிர்கள் அனைத்தும் பிறப்பால் ஒக்கினும் சிறப்பில் ஒத்தவை இல்லையோ அதுபோல்' என்றும், 'செய்தொழில் மட்டுமல்ல, பிறப்பாலும் மக்கள் ஏற்றத்தாழ்வுடையாரே' என்றும் பொருள்கூறி, 'சாதியுணர்வு வள்ளுவரையும் விட்டுவைக்கவில்லை' என்று தமக்குள் நொந்து கொள்கிறார். இவர் இக்குறளுக்குக் கொண்ட பொருள் முற்றிலும் தவறானது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முறையில், இன்னோர் அன்பர் (தினமணி 7.12.2000 வாசகர் கடிதம்) கூறியுள்ள பொருள் : 'பிறக்குங்கால் வேறுபாடின்றிப் பிறக்கும் உயிர்கள், அவை வாழ்விற்காக மேற்கொள்ளும் பலவகைத் தொழில்களாலும் வேறுபாடின்றி ஒத்தவையே'. இவர் கண்டுள்ள இப்பொருளும் குறளோடு பொருந்தவில்லை.

'செய்தொழில் வேற்றுமையால் சிறப்பு ஒவ்வா' என்று வள்ளுவர் கூறுவதால், அவர் தொழிலைப் பொருத்து மனிதர்களுக்கு ஏற்றத்தாழ்வைக் கற்பிக்கிறார் என்றும், ஆகவே தொழில் பகுப்பால்

ஏற்பட்டுள்ள சாதிப் பிரிவுகளை அவர் ஆதரிக்கவே செய்கிறார் என்றும், வள்ளுவர் மீது சிலர் குறை காண்கிறார்கள்.

கொலை செய்வதையே தொழிலாகக் கொண்டிருப்போர் இன்றைய உலகில் பலர் இருக்கிறார்கள். இவர்கள் பணத்திற்காகத் தொடர்பே இல்லாதவர்களையெல்லாம் ஈவு இரக்கமின்றிக் கொல்கின்றனர். இவர்கள் ஒரு பக்கம். உழுதொழில் மேற்கொண்டு, இயற்கையோடு இயைந்து, எளிமை போற்றி வாழுகின்ற உழவர் பெருமக்கள் இன்னொரு பக்கம். இந்த இரு திறத்தாரும் ஒரே சிறப்பு நிலைக்கு உரியவர்கள் என்று, நாம் வாதாடுவது சரியாகுமா?

பாலியல் முறையில், தம் உடலை விற்றுப் பிழைப்பு நடத்துகின்ற பரத்தமைத் தொழிலைச் சில பெண்கள் மேற்கொள்கின்றனர். இவர்களுக்கு 'பாலியல் தொழிலாளர்கள்' என்றும் இந்தப் புத்துலகில் பெயர் வழங்கத் தொடங்கியுள்ளது. இவர்களும், 'பெண்ணின் பெருந்தக்க யாவுள' என்று வள்ளுவம் வியந்து போற்றுகின்ற இல்லாள்களும் (House wife) ஒரே தன்மையானவர்களே என்று எவரும் வாதாட முன்வருவார்களா?

ஆகவே நாம் செய்கின்ற தொழில்கள் எல்லாம் ஒரே தன்மையானவையல்ல; சிறப்பில் ஒத்ததுமல்ல. அதைப் போல், ஒரே தொழிலில் ஈடுபடுவோரிடையேயும் அவரவர் அந்தத் தொழிலை எவ்வாறு மேற்கொள்கிறார்கள் என்பதைப் பொருத்து, அவரவர் சிறப்பு ஏற்றம் அல்லது இறக்கம் பெறுவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, வாணிகம் செய்கின்றவர்களில் ஒருவர், தம்முடைய வாடிக்கையாளர்களிடம் நேர்மையாக நடந்து கொள்கிறார். இன்னொருவர், வாடிக்கையாளர்களை ஏமாற்றிப் பணம் பறிப்பதிலேயே குறியாக இருந்து செயல்படுகிறார். இருவரும் ஒரே தொழிலைத்தான் செய்கிறார்கள் என்றாலும் அந்தத் தொழிலை இருவரும் செய்கின்ற முறைகள் வேறுபடுகின்றன.

அரசுப் பணியில் உள்ள இரண்டு பொறியாளர்கள் கட்டுமானப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று வைத்துக்கொள்வோம். அவர்களில் ஒரு பொறியாளர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளிலேயே கண்ணும் கருத்துமாகச் செயல்படுகிறார். இன்னொருவரோ, தம் பணிகளில் கருத்துச் செலுத்துவதைவிட, குறுக்குவழிகளில் எப்படியெல்லாம் பணம் ஈட்டலாம் என்பதிலேயே

கருத்தாக இருக்கிறார். ஒரே தொழிலில் ஈடுபடுகின்ற இவ்விரு பொறியாளர்களின் செயல்முறை வேறுபடுகிறது. செய்தொழிலில் இவ்விருவர்க்கும் ஒரே அளவு சிறப்பை நாம் கருதிப்பார்க்க முடியுமா?

ஆக, செய்கின்ற வெவ்வேறு தொழில்களின் சிறப்பு மட்டுமின்றி, ஒரே தொழிலைச் செய்கின்ற வெவ்வேறு மனிதர்களின் செயல்முறையும் வேறுபடுகின்றன. சிறப்பில் ஒத்ததாக இருப்பதில்லை. ஆகவே செய்தொழில் வேற்றுமையால் மனித உயிர்களின் சிறப்பு - பெருமை, ஒத்ததாக இருப்பதில்லை. ''செய்தொழில் வேற்றுமையால் சிறப்பு ஒவ்வா'' என்று கூறுகின்ற வள்ளுவத்தை, உள்ளது உள்ளபடி நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்து, திருக்குறளில் உள்ள 'குடிமை' 'குடிசெயல்வகை' ஆகிய அதிகாரங்கள் சாதியைக் குறிப்பதாகத் தவறாகப் பொருள்கொண்டு, சில முற்போக்குச் சிந்தனையாளர்கள் கூட வள்ளுவர் சாதிப்பிரிவை ஆதரிக்கிறார் என்று பழித்துரைக்க முந்துகின்றனர். ஆனால் மேற்குறித்த அதிகாரப் பெயர்களும், குடிப்பிறப்பு, இல்பிறப்பு, குலம் போன்ற வள்ளுவரின் சொல்லாட்சியும் 'குடும்பம்' என்ற பொருளையே குறிக்கின்றன.

'குடிசெயல்வகை' என்ற அதிகாரத்தில் உள்ள குறள்:

**குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்**
**சுற்றமாச் சுற்றும் உலகு** (1025)

இங்கு, குடி என்பதற்குச் சாதி என்று எவ்வாறு பொருள் கொள்ள முடியும்? அப்படிப் பொருள் கொண்டால், சாதித் தலைவர் ஒருவரை உலகமே சொந்தம் கொண்டாடும் என்றல்லவா ஆகிறது? எவ்வளவு முரண்பாடு!

'குடிமை' என்ற அதிகாரத்தின் முதல் குறள்,

**இல்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாக**
**செப்பமும் நாணும் ஒருங்கு** (951)

நல்ல குடும்பத்தில் பிறந்தவரல்லாதவர்க்குச் செப்பமும் நாணமும் இயல்பான முறையில் அமைவதில்லை என்பது இதன் பொருள். இல் வாழ்க்கையே அறம் என்ற தகுதியைப் பெற்றதாகிறது என்பார் வள்ளுவர். அறம் வழிப்பட்ட குடும்பத்தில் பிறந்தவனுக்குச் செப்பமும் நாணுடைமையும் இயல்பான பண்புகளாகும்.

அறவுணர்வு சிறிதும் இல்லாதவர்கள், பிறர்மனை நாடித்திரிபவர்கள், கொலைத் தொழில் புரிபவர்கள், ஒழுக்கம் என்பதே இல்லாதவர்கள், குடி வெறியர்களாய்த் திரிபவர்கள் போன்றோர்தம் குடும்பத்தில் பிறந்து வளரும் ஒருவனுக்கு, அக்குடும்பத்தின் கசடு இருக்கத்தானே செய்யும்? ஆகவேதான்,

**ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்** (133)

என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார் வள்ளுவர்.

'குலம்' என்ற சொல்லாட்சியும், திருக்குறளில் குடும்பத்தையே குறிக்கிறது. வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் வழங்கிய இதுபோன்ற பல சொற்கள் தற்போது பொருள் மாறிவிட்டுள்ளன. 'கொழுநன்' என்ற சொல், வள்ளுவர் காலத்தில், ஒருத்தியின் கணவன் என்று பொருள்பட்டது. ஆனால் இன்று அதற்குக் கணவனின் தம்பி என்றவாறு பொருள் மாறிவிட்டது. இனம் என்ற சொல் தற்போது தமிழினம் ஆரிய இனம் என்று, குறிப்பிட்ட மக்களினத்தைக் குறிக்கிறது. ஆனால், வள்ளுவரது சொல்லாட்சியில் இனம் என்பது, தோழர்கள், கூட்டாளிகள் என்று வழங்கியது.

**நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு**
**இனத்தியல்ப தாகும் அறிவு** (452)

என்ற குறளுக்கு, 'ஒரு குறிப்பிட்ட நிலத்தில் கலந்துள்ள நீர் அந்த நிலத்தின் தன்மைக்கேற்ப மாற்றம் பெறும். அதுபோல் ஒருவனது அறிவு, அவன் சேர்கின்ற நண்பர்கள் அல்லது கூட்டாளிகளின் இயல்பைப் பெற்றதாகும் என்பது பொருள். இவ்வாறு மனித வாழ்க்கையில், உடன் இருப்பவர்கள் பாதிப்பை உண்டாக்குகிறார்கள் என்பதைப் பல இடங்களில் வள்ளுவர் சுட்டிக் காண்பிக்கிறார்.

**மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்**
**கீழல்லார் கீழல் லவர்** (973)

**அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்**

போன்ற குறள்களை முன் நிறுத்திப் பார்த்து வள்ளுவத்தைத் தெளிவாகப் புரிந்து கொளளலாம். ஒரு தனி மனிதன் எப்படி வாழ்கிறான் என்பதைப்

பொருத்தே அவன் உயர்ந்தவனா தாழ்ந்தவனா என்பது விளக்கம் பெறும். வள்ளுவத்தைப் பொருத்தமட்டில், சாதிப்பிரிவுகளுக்கு அணுவளவும் இடம் இல்லை 'அந்தணர்' என்று வள்ளுவர் குறிப்பிடுவது இன்றைய பிராமணர்களை அன்று. வள்ளுவரது இந்தச் சொல்லாட்சி அருளாளர் என்ற பொருளில்தான் உள்ளது. ஆனால் இன்று அந்தணர் என்பது பிராமணர் என்றாகியுள்ளது. காலத்தின் கோலம் என்றுதான் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மனித இனத்தை ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் பார்வை வள்ளுவருடையது. மாந்தர் இனத்தை ஒருங்கிணைக்கும் நோக்கம் அவருடையது. மொத்த மனித சமுதாயத்தின் மூலக்கூறுகளாக விளங்குபவை குடும்பங்கள் மூலக்கூறுகள் மாசுமறுவற்று வலுவாகவும் வளமையாகவும் விளங்கினால்தான் மொத்த மனித இனம் உயர்ந்து விளங்கும். ஆகவே, ஒவ்வொரு குடும்பமும் சிறந்து விளங்க வேண்டும். அதற்காக ஒவ்வொரு குடும்பத்தலைவனும் தலைவியும் பாடாற்ற வேண்டும் என்ற நோக்குடனும் அக்கறையுடனும் வள்ளுவர் குடிமை, குடி செயல்வகை ஆகிய அதிகாரங்களைத் தம்முடைய வாழ்வியற் கருவூலமாகிய திருக்குறளில் சேர்க்கலானார்.

திருக்குறளில் ஏதேனும் ஒரு குறளைப் புரிந்து கொள்வதில் குழப்பம் ஏற்பட்டால், வள்ளுவத்தின் முழுமையுடன் அக்குறளை இணைத்துப் பார்த்து அதன் பொருளை உய்த்துணர வேண்டும். அப்போது தான் குறளின் பொருள் தெளிவான புரிதலுக்கு உட்படும்.

# வழக்காற்றில் 'செல்' - 'போ' என்னும் கிளவிகளின் வேறுபாடுகள்

- ஆய்வாளர் சா. நடராசவேலு

தமிழ்மொழியில் உள்ள 'செல்' 'போ' என்ற இரண்டு கிளவிகளும் ஒரே பொருளைத் தருவதைப் போன்று இருந்தாலும், இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளை வெளிக்கொணர்வதாக இந்தக் கட்டுரை அமைகிறது. 'செல்' 'போ' என்ற இரண்டு கிளவிகளும் தமிழில் போ (go) அல்லது செல் என்ற ஒரு பொருளையே தருகிறது.

எ.டு: அவன் சென்றான்
அவன் போனான்.

என்ற தொடர்களில் செல், போ என்னும் கிளவிகள் வினையடியாக நிற்கின்றன. மேலும், இவை ஏவல் பொருளுணர்த்துவதாக உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வருகின்றன.

| எ.டு: <u>உடன்பாடு</u> | <u>எதிர்மறை</u> |
|---|---|
| நீ செல் | நீ செல்லாதே |
| நீ போ | நீ போகாதே |
| அவன் செல்லட்டும் | அவன் செல்லாதிருக்கட்டும் |
| அவன் போகட்டும் | அவன் போகாதிருக்கட்டும் |

என்ற தொடர்களில், இந்தக் கிளவிகள் வினையடியாக நிற்கின்றபோது உடன்பாட்டுப் பொருளை மட்டும் உணர்த்துகின்றன. ஆனால், அவை ஏற்று வரும் இடைநிலைகளுக்கு ஏற்ப உடன்பாட்டுப் பொருளையோ அல்லது எதிர்மறைப் பொருளையோ தருகின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது.

'செல்' 'போ' என்ற இரண்டு கிளவிகளும் தமிழில் ஐந்து பால்களுக்கும், மூன்று இடத்திற்கும், மூன்று காலங்களுக்கும் பொதுவாக வரக்கூடியவை

| எ.டு: | <u>செல்</u> | <u>போ</u> |
|---|---|---|
| <u>தன்மை</u> | நான் சென்றேன் | நான் போனேன் |
| | நாம் சென்றோம் | நாம் போனோம் |
| | நாங்கள் சென்றோம் | நாங்கள் போனோம் |

| | | |
|---|---|---|
| முன்னிலை | நீர் செல்கின்றீர் | நீர் போகின்றீர் |
| | நீவிர் செல்கின்றீர் | நீவிர் போகின்றீர் |
| | நீங்கள் செல்கின்றீர் | நீங்கள் போகின்றீர் |
| படர்க்கை | அவன் செல்வான் | அவன் போவான் |
| | அவள் செல்வாள் | அவள் போவாள் |
| | அவர் செல்வார் | அவர் போவார் |
| | அது செல்லும் | அதுபோகும் |
| | அவை செல்லும் | அவை போகும் |

என்ற தொடர்களைக் கொண்டு 'செல்' என்னும் கிளவி இறந்தகால இடைநிலையைப் பெறுகின்றபோது மட்டும் 'சென்' எனத்திரிந்து வரும் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை 'செல்' 'போ' என்ற இரண்டு கிளவிகளும் ஒரு பொருள் தருகின்ற தன்மையினைக் கண்டோம். இனி இவ்விரு கிளவிகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டுத் தன்மையினைக் காண்போம்.

'செல்' 'போ' என்ற இரண்டு கிளவிகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினைத் தனிவினை வாக்கியங்களில் (simple sentances) காணமுடியாது.

எ.டு: நான் செல்கிறேன்
நான் போகிறேன்.

என்ற இரண்டு தொடர்களிலும் வேறுபட்ட பொருள் ஏதும் இல்லை. கூட்டுவினை வாக்கியங்களில் (compound sentances) 'செல்', 'போ' என்னும் கிளவிகளுக்கு இடையே உள்ள நுட்பமான வேறுபாடுகளைக் காணமுடியும்.

எ.டு: அவன் ஓடப்போகிறான்
அவன் ஓடச்செல்கிறான்

என்ற தொடர்களும் செய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தொடர்கள் என்பதில் சிறிதும் ஐயப்பாடில்லை. 'அவன் ஓடப் போகிறான்' என்னும் தொடர், அவன் ஓடுவதற்குத் தயாராக இருக்கிறான் என்னும் பொருளைத் தருகிறது. இதே பொருளை 'அவன் ஓடச் செல்கிறான்' என்னும் தொடர் தரவில்லை என்பதால், 'செல்', 'போ' என்னும் கிளவிகள் கூட்டுவினை வாக்கியங்களில் ஒரே பொருள் உணர்த்தவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

மேலும் தெளிவிற்காக 'அவள் வரப்போகிறாள்' என்னும் தொடரை எடுத்துக்கொள்வோம். இந்தத் தொடரில் இடம்பெற்றுள்ள 'போ' என்னும் கிளவிக்குப் பதிலாகச் 'செல்' என்னும் கிளவியைப் பயன்படுத்தினால்,

'அவள் வரச்செல்கிறாள்'

என்னும் தொடர் உருவாகிறது. இந்த இரண்டு தொடர்களும் ஒரே பொருளைத் தருகின்றனவா? என்று பார்க்கின்றபோது, 'அவள் வரப்போகிறாள்' என்னும் தொடர் அவள் மிகக்குறுகிய காலத்தில் இங்கு வந்துவிடுவாள் என்னும் பொருளைத் தருகிறது. இதே பொருளை 'அவள் வரச் செல்கிறாள்' என்னும் தொடர் தரவில்லை.

'அவள் வருகிறாள்', 'அவள் செல்கிறாள்' என்ற இரண்டு தொடர்களும் ஒன்றற்கொன்று தம்முள் முரண்பட்ட தொடர்களாம். இந்த இரண்டு தொடர்களும் இணைந்து, 'அவள் வரச்செல்கிறாள்' என்னும் ஒரு தொடராக அமைந்துள்ளது இந்தத் தொடர் மக்களின் வழக்காற்றில் பயன்படுவது இல்லை.

ஒரு தொடரில் உடன்பாட்டுச் சொல்லும், எதிர்மறைச் சொல்லும் இடம்பெற்றால், அந்தத் தொடர் வழக்காற்றில் பயன்படுவது இல்லையா? என்றால், அந்தத் தொடரில் இடம்பெற்றுள்ள எதிர்மறைச்சொல் எத்தகையது என்று பார்க்கவேண்டும். இலக்கணவழி எதிர்மறைச் சொல்லாக இருப்பின் மிகுதியாக மக்கள் வழக்காற்றில் பயன்படுகிறது.

எ.டு: அவர் வந்ததும் வராததும் எனக்குத் தெரியும்
அவர் போனதும் போகாததும் எனக்குத் தெரியும்.

என்ற தொடர்களில் 'வந்ததும்' என்பதற்கு எதிர்மறை 'வராததும்', 'போனதும்' என்பதற்கு எதிர்மறை 'போகாததும்' என்பன இலக்கணவழி எதிர்மறை என்பது குறிப்பிடத்தக்கது.

'செய' என்னும் வாய்பாட்டு எதிர்மறைத் தொடர்கள் வழக்காற்றில் பயன்படுவதில்லை என்பதும், செய்து என்னும் வாய்பாட்டு எதிர்மறைத் தொடர்கள் வழக்காற்றில் பயன்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் 'செல்' 'போ' என்னும் கிளவிகள் வினையடியாகவோ அல்லது வினைச்சொற்களாகவோ இருக்கின்றபோது ஏற்படும் வேறுபாட்டு நிலை, பெயர்ச்சொற்களாக இருக்கின்றபோதும் சில இடங்களில் உண்டு.

எ.டு: 'அவன் செல்வந்தரின் மகன்'

என்ற தொடரில் இடம்பெற்றுள்ள 'செல்' என்னும் கிளவிக்குப் பதிலாகப்

'போ' என்னும் கிளவியைப் பயன்படுத்த இயலாது. இதே போல,

'அவன் போக்கிரிப் பையன்'

என்ற தொடரில் இடம்பெற்றுள்ள 'போ' என்னும் கிளவிக்குப் பதிலாகச் 'செல்' என்னும் கிளவியைப் பயன்படுத்த இயலாது. ஒரு தொடர் மிகவும் பொருத்தமான தொடராக இருப்பின், அத்தொடரில் இடம்பெற்றுள்ள ஒரு கிளவியை எடுத்துவிட்டு, மற்றொரு கிளவியைப் பயன்படுத்தினால், அந்தத் தொடர் பொருளற்ற தொடராக அமையும் என்பதற்கு மேற்கண்ட கூட்டுவினைத் தொடர்கள் சான்றாக உள்ளன.

மக்கள் வழக்காற்றில் இடம்பெறுகின்ற 'செல்' 'போ' என்னும் கிளவிகள் இடம்பெறும் தொடர்களைப் போன்று இலக்கியம் மற்றும் இலக்கண வழக்காறுகளிலும் இடம்பெற்றுள்ளன

எ.டு : **''கன்றலும் செலவு மொன்றுமார் வினையே''**

(தொல்-சொல்-87)

**''வேறு இல்லை உண்டு யார்வேண்டும் தகும் படும்**
**வினை பெயரெச்சம் வியங்கோள் பத்தும்**
**திணைபால் இடமெல்லாம் செல்லும் என்ப''**

(இலக்கணக் கொத்து - 85)

என்பனவற்றைக் கொண்டு, 'செல்' என்னும் கிளவி இலக்கண வழக்காற்றில் தொல்காப்பியர் காலந்தொட்டு, பயன்பட்டு வந்துள்ளதை அறியமுடிகிறது. ஆனால், 'போ' என்னும் கிளவி காப்பியக் காலந்தொட்டு மிகுதியாகப் பயன்படத் தொடங்கின என்பதற்குச் சான்றாக,

**''நீபோ, யாங்களும் நீளெறிப் படர்குதும்''**

(xi. 161 -சிலம்பு)

என்ற தொடரைக் காட்டலாம். மேலும், இலக்கண வழக்காறுகளிலும் 'செல்' 'போ' என்னும் கிளவிகளுள் ஒன்று பயன்படும் இடத்தில் மற்றொன்றைப் பயன்படுத்த இயலாது என்பதற்குச் சான்றாகச் சில இலக்கணத் தொடர்களைக் காண்போம்.

### துணைவினைத் தொடர்களில் 'செல்' - 'போ' என்னும் கிளவிகள்:

துணைவினையாக வரும் கிளவிகளுள் 'செல்' என்னும் கிளவி இடம்பெறுவதில்லை. 'போ' என்னும் கிளவி இடம்பெறும் செல் என்னும் கிளவியைத் துணைவினையாகக் கருதி, ஒரு தொடரில் இடம்பெறச்

செய்தால் அது துணைவினையாக நில்லாமல், முதல்வினையாகவே நிற்கும்.

எ.டு : அவள் ஓடிப்போனாள்
அவள் ஓடிச் சென்றாள்

என்ற தொடர்களில் இடம்பெற்றுள்ள, 'ஓடிப்போனாள்' என்பதிலுள்ள 'ஓடி' என்பது முதல்வினை, போனாள் என்பது துணைவினை; இவை இரண்டும் சேர்ந்து 'ஓடிப்போதல்' என்ற ஒரு வினையை உணர்த்துவதாக உள்ளதே ஒழிய, ஓடுதல், போதல் என்ற இரண்டு வினையை உணர்த்துவதாக இல்லை. ஆனால், 'ஓடிச் சென்றாள்' என்பதிலுள்ள 'ஓடி' முதல்வினை; சென்றாள் என்பதிலுள்ள 'செல்' துணைவினையைப் போன்று இருந்தாலும், இங்கு முதல்வினையாகவே இருக்கின்றது என்பதால் ஓடுதல், செல்லுதல் என்ற இரண்டு வினைகளை உணர்த்துகின்றன.

'போ' என்னும் கிளவி ஒரு தொடரில் முதல் வினையாகவும் துணைவினையாகவும் வருவதைப்போலச் 'செல்' என்னும் கிளவி வருவதில்லை.

எ.டு : அவன் போகப் போகிறான்
அவன் செல்லச் செல்கிறான்

என்ற தொடர்களில் 'போ' என்னும் கிளவி முதல் வினையாகவும், துணைவினையாகவும் வந்து, அவன் போவதற்குத் தயாராக இருக்கின்றான் என்னும் ஒரு பொருள் உணர்த்துவதாக உள்ளது. 'செல்' என்னும் கிளவி முதல்வினையாகவும், துணைவினையாகவும் வருகின்றபோது அந்தத்தொடர் பொருளற்ற தொடராக அமைந்து விடுகிறது என்பதால் துணைவினைத் தொடரில் 'போ' என்னும் கிளவிக்குப் பதிலாகச் 'செல்' என்னும் கிளவியைப் பயன்படுத்த இயலாது.

### வினையாலணையும் பெயர்த்தொடரில் 'செல்' - 'போ' என்னும் கிளவிகள் :

வினையாலணையும் பெயர்த் தொடரில் 'போ' என்னும் கிளவி இடம்பெற்றுள்ள இடத்தில் 'செல்' என்னும் கிளவியைப் பயன்படுத்த இயலாது.

எ.டு: அவன் போக்கற்றவன்.

என்ற தொடரில் இடம்பெற்றுள்ள 'போ' என்பதற்குப் பதிலாகச் 'செல்' என்னும் கிளவியைப் பயன்படுத்தினால்,

'அவன் செல்க்கற்றவன்'

என்ற பொருளற்ற தொடர் கிடைக்கிறது. ஆதலால், இந்தத் தொடர்களில் 'போ' என்னும் கிளவிக்குப் பதிலாகச் 'செல்' என்னும் கிளவியைப் பயன்படுத்த இயலாது என்று கூறுகிறோம்.

## வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் 'செல்' - 'போ' என்னும் கிளவிகள் :

ஏவல் பொருளைத் தரும் வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் 'செல்' என்னும் கிளவிக்குப் பதிலாகப் 'போ' என்னும் கிளவியைப் பயன்படுத்த இயலாது.

எ.டு : 'நீ செல்க'

என்ற தொடரில் இடம்பெற்றுள்ள 'செல்' என்னும் கிளவிக்குப் பதிலாகப் 'போ' என்னும் கிளவியைப் பயன்படுத்தினால்,

'நீ போக'

என்னும் எச்சத்தொடர் கிடைக்கிறது. இந்தத் தொடர் நீ செல்க என்பது போன்று, முற்றுப் பொருளைத் தரவேண்டுமாயின், நீ போக என்பதுடன் 'வேண்டும்' அல்லது கூடாது என்னும் கிளவிகளைச் சேர்க்கவேண்டும். அவ்வாறு சேர்த்தால் வியங்கோள் வினைமுற்றுத்தொடர் என்பதன் பொருள் மாறிவிடுகிறது என்பதால், இத்தகைய தொடர்களில் 'செல்' என்னும் கிளவிக்குப் பதிலாகப் 'போ' என்னும் கிளவியைப் பயன்படுத்த இயலாது என்று கூறுகிறோம்.

## மரபுத்தொடர்களில் 'செல்', 'போ' என்னும் கிளவிகள் :

மரபுத் தொடர்கள், இரண்டு பொருள் தரக்கூடியனவாக அமைந்திருக்கும். மேலும், இவை ஆகுபெயருடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. இத்தகைய தொடர்களில் இடம்பெற்றுள்ள 'செல்' என்னும் கிளவிக்குப் பதிலாகப் 'போ' என்னும் கிளவியைப் பயன்படுத்த இயலாது.

எ.டு : 'அவன் சீட்டு எங்கிட்ட செல்லாது'

என்ற தொடரில் இடம்பெற்றுள்ள 'சீட்டு' என்னும் சொல், காகிதத் துண்டு என்னும் பொருளைத் தராமல் ஒருவனுடைய சூழ்ச்சித் திறனைக் குறிக்கிறது. இவ்வாறு நேர் பொருள் ஒன்றும், தொடர் சார்ந்த பொருள் ஒன்றும் உணர்த்தக்கூடிய சொற்கள் இடம்பெறுகின்ற தொடர்கள்

தொன்றுதொட்டு வழங்கிவருவதால் மரபுத் தொடர்கள் என்று கூறுகிறோம். மேற்கண்ட மரபுத் தொடரில் இடம்பெற்றுள்ள 'செல்' என்னும் கிளவிக்குப் பதிலாகப் 'போ' என்னும் கிளவியைப் பயன்படுத்தினால்,

''அவன் சீட்டு எங்கிட்ட போவாது''

என்ற பொருளற்ற தொடர் கிடைப்பதால்தான் 'செல்' என்னும் கிளவிக்குப் பதிலாகப் 'போ' என்னும் கிளவியைப் பயன்படுத்த இயலாது என்று கூறுகிறோம்.

## எதிர்மறைப் பெயரெச்சத் தொடரில் 'செல்', 'போ' என்னும் கிளவிகள் :

இந்தத் தொடர்களிலும் 'செல்' என்னும் கிளவிக்குப் பதிலாகப் 'போ' என்னும் கிளவியைப் பயன்படுத்த இயலாது.

எ.டு : 'இது செல்லாத காசு'

என்ற தொடரில் இடம்பெற்றுள்ள 'செல்' என்னும் கிளவிக்குப் பதிலாகப் 'போ' என்னும் கிளவியைப் பயன்படுத்தினால்,

'இது போவாத காசு'

என்ற பொருளற்ற தொடர் கிடைப்பதால், 'செல்' என்னும் கிளவிக்குப் பதிலாகப் 'போ' என்னும் கிளவியைப் பயன்படுத்த இயலாது என்று கூறிகிறோம்.

எனவே, உலக வழக்காயினும், இலக்கண - இலக்கிய வழக்காயினும், தனிநிலை வாக்கியங்களில் பெரும்பாலும் சிக்கல் ஏற்படுவது இல்லை என்றும், கூட்டுவினை வாக்கியங்களில், அத்தொடர் உணர்த்தும் பொருளறிந்து சொற்களை இடம்பெறச் செய்தல் வேண்டும் என்றும், அவ்வாறு இடம்பெறச் செய்யாவிடில் சிக்கல் ஏற்படும் என்றும், ஏன்? அந்தத் தொடர்களே பொருளற்ற தொடர்களாகும் என்றும், இந்தக் கட்டுரையின் வாயிலாக உணராம்.

# திருவள்ளுவரைத் தெரிந்து கொள்ளுங்கள்

- நாபா

(முன் இதழ் தொகுதி 95 பகுதி 4 தொடர்ச்சி)

## கல்வி; கல்லாமை

### கற்றல் வேண்டும் :

கல்வி இருவகைப்படும். அவை பொதுக்கல்வி, சிறப்புக்கல்வி என்பனவாம். பொதுக்கல்வி என்பது எண்ணும் எழுத்தும் கற்றுத் தருவது; எண்ணவும் எழுதவும் கற்பிப்பது அஃதாவது மக்களாகப் பிறந்து எல்லோரும் கல்வி பெறல் வேண்டும் என்பதாம் சிறப்புக் கல்வி என்பது துறைசார்ந்த கல்வி. ஒருவன் வாழ்க்கையில் எத்தகைய பணியை மேற்கொள்ள விரும்புகிறானோ - மேற்கொள்கிறானோ - அப்பணி பற்றிய பரந்த - ஆழ்ந்த - நுண்ணிய அறிவுத் திறன் பெறத்தக்க சிறப்புக்கல்வியாகும். இஃது இன்றியமையாதது.

### கற்கப்படும் நூல்கள் :

கல்வி என்பது மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் பெற வேண்டிய பெரும்பேறாகும். ஆனால், நாட்டை ஆள்பவனுக்குக் கல்வி இன்றியமையாதது. திருவள்ளுவர் கூறும் ஒவ்வொரு செய்தியும் கருத்தும் எல்லோர்க்கும் பொதுவானவை; ஆட்சியாளர்க்குச் சிறப்பானவை என்பது மனங்கொள்ளல் வேண்டும் கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்பது பழமொழி. ஆனால், வாழ்நாட்கள் சில; பிணிகளோ பல; பெறும் அறிவோ அளவில் சிறிது. ஆகையினால் வாழ்க்கைக்கு எவை மிக்க பயன் தருமோ அவற்றையே கற்றல் வேண்டும்; அறிவுடைமையும் அதுவே. இன்று தோன்றி நாளை மறையும் புற்றீசல் போன்ற போலி நூல்களைப் படித்து நேரத்தை வீணாக்குதல் கூடாது. படிக்க வேண்டுவனவற்றைச் சிந்தித்துத் தேர்ந்தெடுத்துப் படித்தல் வேண்டும். இத்தகைய நூல்களையே திருவள்ளுவர் கற்பவை கற்க என்றார். ஒரு நூலைக் கற்பதனால் வரும் பயன்கள் நான்கு என்பர் மேலோர். அவை . அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம். மனைவி மக்களோடு இல்லறத்தில் வாழ்வோர், முயற்சி மேற்கொண்டு உழைத்துப் பொருள் ஈட்டி இல்லற இனபம் அனுபவித்து, இறுதியில் மீண்டும் பிறவாமைக்குரிய வழிகளையும் தேடவேண்டும் இப்பேற்றை அடைய மக்கள் கற்க வேண்டிய நூல்கள் வருமாறு :

1. **அறம் :** அறநூல்கள், ஒழுக்கம் பற்றியவை, நீதி நூல்கள் முதலியன
2. **பொருள் :** பொருளியல் தொடர்பான நூல்கள்; வணிகம் நிருவாகம் பற்றியவை
3. **இன்பம் :** இல்வாழ்க்கை பற்றிய நூல்கள். கணவனும் மனைவியும் மனையறம் பூண்டு வாழ்க்கையில் இன்பமாக வாழும் நெறிமுறைகளைக் கற்பிக்கும் உயரிய காதல் நூல்கள்
4. **வீடு :** வீடு என்பது விடுதலை, விடப்படுவது வீடு. பற்றுக்களை நீக்கித் துறவுள்ளம் கொண்டு இனிமேல் பிறவாமைக்குரிய வழிகளைக் கூறும் ஞான நூல்கள்; மெய்ந்நூல்கள்.

மேற்கண்ட உயரிய வாழ்வியல் நூல்களே கற்பவை என்னும் தொடரால் குறிக்கப்படுவன.

இனி, இவற்றைப் படித்தால் மட்டும் போதாது; சந்தேகம் நீங்கத் தெளிவாகக் கற்க வேண்டும்; ஐயம், திரிபு அகற்றி, உண்மை காணும் நுட்பத்துடன் கற்றல் வேண்டும். இவற்றிற்குரிய கருவி நூல்கள் இரண்டு என்பார் திருவள்ளுவர். எண்ணும் எழுத்துமே அவை. எண் என்பது கணிதம் முதலியன; எழுத்தென்பது இலக்கியம் போன்றவை. சுருங்கக்கூறின், ஒவ்வொருவரும், சிறப்பாக ஆட்சியாளர் எண்ணாகிய அறிவியல் நூல்களையும் (sciences) எழுத்தாகிய இலக்கியம் காட்டும் சமுதாயவியல் நூல்களையும் (Humanities) கற்றல் சிறப்பு இவ்வாறு கற்ற பின், கற்றபடி நிற்றல் வேண்டும். நிற்றலாவது நடைமுறை ஒழுக்கம். படிப்பதும் நடப்பதும் மாறுபடல் கூடாது. மேலே கூறப்பட்ட செய்திகளால், மக்களாகப் பிறந்தவர்கள் கற்க வேண்டும் என்பதும், கற்கப்படும் நூல்வகைகளும், அவற்றைக் கற்க வேண்டும் முறையும், அவ்வாறு கற்பதால் விளையும் பயனும் விளக்கமாதல் அறியலாம்.

**கற்றோர் சிறப்புக்கள் :**

1. கற்றவர்களே உண்மையில் கண் உடையவர்கள்.
2. பழகும்போது மகிழ்ச்சியும் பிரியும்போது ஏக்கமும் கொள்ளல்.
3 கற்றவர்களே மக்களுள் முதன்மையானவர்கள்.
4. கற்றலால் புதிது புதிதாக அறிந்துகொள்ளும் திறன் பெறுதல்
5 கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
6. ஒருபிறப்பில் கற்றுவிட்டால், அது பிறவிகள்தோறும் உடன்வரும் நற்பேறு
7. ஒருவர் அடையும் இன்பத்தைக் கண்டு பிறரும் இன்பம் அடைதல் கல்வியால் தான் ஏற்படும்.
8 கல்வி ஒன்றே என்றும் அழியாத செல்வம்.

இனி, கற்காவிட்டால் என்ன? எனக் கேட்போரை நோக்கித் திருவள்ளுவர் அதனால் ஏற்படும் இழப்புக்களையும் விவரித்துள்ளார்.

**இழப்புக்கள் :**

1. கல்லாதவர்களுக்கு முகத்தில் இருப்பவை கண்கள் அல்ல; புண்களே.
2. கல்லாதவர்கள் வாழ்க்கைப் பயனை இழப்பார்கள்.
3. பிறரோடு மனம் கலந்து உரையாடி மகிழும் பேற்றினை இழத்தல்
4. கல்லாதவர் மக்களுள் கடைப்பட்டவர்
5. செல்வம் இருந்தும் இல்லாதவராகவே கருதப்படுவர்.
6. அறிவு வளர்ச்சி இல்லாது போகும்.
7. கிணற்றுத் தவளைகளாக வாழ்வார்கள்; அவர்களின் ஊரும் பேரும் விளங்கா.
8. நிலம்புலம், கன்று காலிகள், அசையும் சொத்து அசையாச் சொத்து முதலியன வெல்லாம் கல்வியைப் போல நின்று பயன் தாரா.

மேலும் விரித்துக் கூற முற்படும் திருவள்ளுவர் மக்கள் அல்லது ஆளுவோர் தமக்குரிய உரிய நூல்களைக் கற்காவிட்டால் ஏற்படும் பல்வேறு கேடுகளையும் நிரல்படுத்திக் காட்டுகிறார்.

**கல்லாமை : விளைவுகள் :**

1. நூற்கல்வி இல்லாமல் சபையில் பேசுவோனின் சொல்லும் பொருளும் ஒழுங்கின்றிப் போகும்.
2. அவன் பேச்சு சிரிக்கத்தக்கதாகிவிடும்; கேவலப்படுவான்.
3. கற்றவர்கள் முன்னால் நிற்கும் தகுதியை இழக்க நேரிடும்.
4. கல்லாதவன் அறிவு கற்றார்முன் எடுபடாது; மதிப்பிழக்கும்.
5. சொற்சோர்வு ஏற்படும்.
6. விளையாத களர் நிலத்திற்குச் சமமாவர்.
7. கல்வியறிவு இல்லாதவன் பொம்மை போன்றவன்.
8. படிக்காதவனிடம் சேர்ந்த பணம் நல்லவர்களிடம் இருக்கும் வறுமையைவிடக் கொடியது.
9. கல்வி ஒன்றுதான் உயர்வு தாழ்வை அகற்றும்.
10. கற்காவிடில் மாடும் மனிதனும் சமமே; வேறுபாடு இல்லை.

எவ்வளவு கடுமையாகச் சாடுகிறார் என்பது மேலே காட்டியவற்றால் தெளிவாகும். கல்லாத ஒருவன் பிறவகைகளில் ஓங்கியிருந்தாலும், அவன் நாட்டிற்கோ, நிறுவனத்திற்கோ, கட்சிக்கோ

தலைமை தாங்கும் தகுதியை இழந்துவிடுகிறான் என்பது வள்ளுவரின் உறுதியான கருத்து.

சங்ககாலத்தில் அரசர்கள் கல்வியின் சிறப்பினை நன்கு அறிந்திருந்த காரணத்தால், சமுதாயம் அறிவுடன் மிளிர்ந்தது. எடுத்துக்காட்டாகப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் ஒன்றினைக் காண்போம் :

**''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே'' (புறம்)**

என்று அரசன் கற்றலை வற்புறுத்துவது மனங்கொள்ளத்தகும். அன்றியும்,

**''வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே'' (புறம்)**

என்று கூறுமுகத்தால், ''*கற்றவன் மேல்சாதி; கல்லாதவன் கீழ்ச்சாதி*'' என்றும், பிறப்பினால் மேல், கீழ் என்பதில்லை என்றும், கல்வி ஒன்றுதான் மனிதனை உயர்த்தும் என்றும் அவ்வரசன் விரிவாக விளக்கியிருப்பது மனங்கொண்டு மகிழத்தகும். எனவே, முறையான நூற்கல்வி உடையவர்கள் ஆட்சியில் அமர்ந்தால்தான், சமுதாயத்தில் கல்வி பரவும் என்பது உயத்துணரப்படும். இதுகாறும் கூறியவற்றால் கல்வி இன்றியமையாதது என்பதும், அஃது ஒன்றுதான் மனிதனை விலங்கினின்றும் வேறுபடுத்துவது என்பதும், ஆட்சியாளர் நல்ல கல்விமான்களாக இருத்தல் வேண்டும், கல்லாமையினால் பல இழிவுகளும் கேடுகளும் வரும் என்பதும், கல்லாதவனைக் கற்றோர் அவையில் யாரும் மதிக்கமாட்டார்கள் என்பதும், படிக்காதவன் இயல்பாகவே மேதையாக இருந்தாலும் கற்றுத்துறைபோகிய வல்லுநர்கள் குழுவில் அவனைச் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள். என்பது விரிவாகக் கூறப்பட்டன. கல்வி, கல்லாமை என்ற இரு அதிகாரங்களில் கூறப்பட்ட இவற்றைப் பின்வரும் சில குறட்பாக்கள் இரத்தினச் சுருக்கமாக விளக்குவனவாகும்.

**'' எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு''**

**'' கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை''**

"கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்
கொள்ளார் அறிவுடை யார்"

## கேள்வி

கேள்வி என்பது ஒருவர் பேசத் தான் கேட்டல் என்பதாம். கல்வி என்னும் பயிர் செழித்து வளரக் கேள்வி என்னும் நீர் இன்றியமையாதது. கல்வியால் பெறும் அறிவு வலிமை பெறுவதற்கும், கல்லாதவனும் அறிவு பெறுவதற்கும் கேள்வி பயன்படும். "கேள்வி முயல்" என்பார் ஔவையாரும். பிறர் கூறும் நல்ல செய்திகளையும் நூற் கருத்துக்களையும் கேட்பது என்பதனை வழக்கமாக்கிக் கொள்ளல் வேண்டும். திருவள்ளுவர் கேள்வியை ஒரு சிறந்த செல்வமாகவே கருதுகிறார் இது கேள்விச் செல்வம் எனப்படும். இஃது பிற செல்வங்கள் எல்லாவற்றினும் உயர்ந்தது; அழியாதது. நிலம், புலம், பணம் முதலிய செல்வங்களை ஈட்டுவதற்கு உடலுழைப்பு வேண்டும், துன்பப்பட வேண்டும். ஆனால் கேட்டு அறிவு பெறுவதாகிய செல்வம் உழைப்பின்றி, ஈட்டும்போதும் இன்பம் தருவதொன்றாகும். எனவே, பிற செல்வங்களை ஈட்டாவிடினும் கேள்விச் செல்வத்தை ஈட்ட வேண்டும் என்று வலியுறுத்துகிறார் திருவள்ளுவர்.

வயிறு நிரம்புதற்குச் சோறிடல் வேண்டும்; செவியும் மனமும் நிரம்புதற்குக் கேள்வி வேண்டும் உண்பதே இருந்து கேட்டல் வேண்டும் என்பதற்காக என்பார் வள்ளுவர். பிறர் கூறும்போது கேட்டுச் சுவைக்கிறோம்; அச்சுவை மறைந்துவிடாமல், பின்னரும் நின்று உதவுகிறது. ஆனால் வயிற்றுச் சுவை உண்டபோதே மறந்துவிடும். உணவைத் தேடிப் பெறவேண்டும்; கேள்விச் செல்வம் முயற்சி இன்றித் தானே கிடைக்கிறது. கேட்டல் மாத்திரமே இவனது செயல்; வேறு உழைப்போ, முயற்சியோ செய்ய வேண்டா. இதுகாறும் கூறியவற்றால் கேட்டலின் சிறப்பு நன்கு விளங்கும். இனி, கேள்வியால் விளையும் பிற நன்மைகளைச் சிந்திப்போம்.

**நன்மைகள் :**

1. கேட்டலால் அறிவு வளரும்; அறிஞர் ஆகலாம்.
2. துன்பம் வரும்போது கேள்வியறிவு துணைசெய்யும்.
3. ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் கேட்டலால், தானும் ஒழுக்கசீலன் ஆகிறான். அறிவின்மையால் தான் தளரும்போது ஊன்றுகோல் போன்று உதவுகிறது கேள்விச் செல்வம்.
4. நல்லவற்றைக் கேட்டலால் ஒருவன் பெருமை அடைகிறான்; பேதைமை (மடமை) நீங்கும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் கற்க வேண்டும் என்பது முன்னர்க் கூறப்பட்டது. ஒருவேளை, அவனால் கற்கும் வாய்ப்பைப் பெறமுடியாவிட்டாலும், பிறர் கூறும் அறநூல் கருத்துக்களைக் கேட்கவாவது செய்தல் வேண்டும். வாய்க்கும்போதெல்லாம் கேட்பானானால், அறிவு அவனுக்கு நாளடைவில் வளர்ந்து கொண்டேபோகும் அதனால் பெற்ற அறிவு ஒருவனது வறுமையைப் போக்கவும், அறியாமையை அகற்றவும் உதவும். எனவே, சான்றோர் கூறும் உறுதி பயக்கும் நூற் பொருளைக் கேட்டல் வேண்டும்.

வழுக்கல் நிலத்தில் நடந்து செல்லும் ஒருவன் கீழே வீழாமல் செல்ல ஓர் ஊன்றுகோல் பெரிதும் உதவும். நாடாளும் அரசர் (தலைவர்) ஆட்சி செய்யும்போது, அறநெறி பிழைக்காமல் இனிது ஆள்வதற்குச் சான்றோரது வாய்ச்சொல் (அறிவுரை) அவர்களுக்குத் துணை நிற்கும். எனவே, பெரும்பதவி வகிப்போரும் கேள்விச் செல்வத்தைப் பெறல் வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

இனி, கேட்கும் காலம் குறைவானாலும், கேட்கும் பொருள் சிறிதானாலும், அதனைப் புறக்கணிக்காது விரும்பிக் கேட்டல் நன்று. கேட்ட அளவுக்கு நன்மை தருவது உறுதி; இகழ்தல் கூடாது.

சான்றோர் எப்போதும் நல்லனவே கூறுவர். மறந்தும் பயனற்ற - தீய சொற்களைப் பேசார். தம் அனுபவம், கல்விப் பரப்பு ஆழம் முதலிய சிறப்புக்களால் மக்களுக்கு வழிகாட்டும் உறுதி மொழிகளையே கூறுவர். எனவே, தளராது கேட்க, பெரியோர் வாய்ச்சொல் என்றும் பிறழாது என்பதனை உணர்தல் வேண்டும். இது நாடாள்வோர்க்குப் பெரிதும் பயனுடையதாம்.

## கேளாமையால் வரும் குற்றங்கள் :

உடலுறுப்புக்களுள் கண்களும் காதுகளும் தலையாய உறுப்புக்கள். கண்டும் கேட்டும் அறிவு பெறலாம். காதுகள் செவிடாக இல்லாமல் ஓசையைக் கேட்பவையாக இருந்தாலும், அறிஞர்தம் சொற்பொழிவுகளையும் உபதேசங்களையும் கேட்காதவரின் செவிகள் செவிட்டுச் செவிகளேயாம் என்கிறார் திருவள்ளுவர்.

1. கேட்பினும் கேளாத் தகையவே
2. கேள்விச் செல்வம் பெறாதவர் பணிவுடையராதல் அரிது.
3. செவிச் சுவையாகிய கேள்விச் சுவையறியாத மக்கள் வாழ்ந்தாலும் செத்தவர்களாகவே கருதப்படுவர்.

காதில் இயல்பாக அமைந்துள்ள துளை, மனத்தில் நூல்களின் பொருள் நுழைவதற்குக் கருவியாகும். கேள்வியால் அறிவினை உள்ளே நுழையவிடாமல் இருந்தால் அத்துளையால் பயனில்லை என்பதாம்.

சான்றோர் கூறும் நுட்பமான கருத்துக்களைக் கேளாதார் வணங்கியவாயினர் ஆதல் அரிது. வணங்கிய வாய் நுணங்கிய கேள்வியால்தான் வரும் என்கிறது திருக்குறள். கேள்வியால் அறிவு பெறாதோர் தம்மை வியந்து பாராட்டித் திரிவர் என்பதாம். திருவள்ளுவர் கோபப்படுகின்ற இடங்கள் சில உள அவற்றுள் ஒன்று கேள்விச்செல்வம் பெற மறுப்பவர்களைப் பற்றியது. அறிஞர்தம் கூட்டங்களுக்குப் போகாமலும், நிபுணர்கள் கலந்துகொள்ளும் கருத்தரங்குகளுக்குப் போகாமலும் எல்லாம் தமக்குத் தெரியும் எனக் கூறித் திரியும் மக்கள் வாழ்ந்தால் என்ன? வீழ்ந்தால் (செத்தால்) என்ன? என்று கடுமையாகச் சாடியுள்ளார் திருவள்ளுவர்.

இதுகாறும் கூறியவற்றால், கேள்வி என்பது ஒரு செல்வம் என்பதும், அதனைப் பெற்றால் பெரும் பயன் அடைவர் என்பதும், பெறாவிடின் ஏற்படும் குறைகளும் நன்கு தெளிவாகும்.

## அறிவுடைமை

நூல்களைக் கற்பதாலும் கேட்டலாலும் வரும் அறிவு மிக்க வலிமை உடையது. அறிவும் ஓர் அழியாத செல்வம். உடைமை என்னும் சொல் செல்வம் எனப் பொருள்படும். கற்றலால் அறிவு வளர்கிறது; கேள்வியால் அவ்வறிவு வலிமை பெறுகிறது; சநதேகமும் மயக்கமும் ஒழிந்த தெளிந்த அறிவு அது. இத்தகைய அறிவு மக்கள் யாவர்க்கும் வேண்டும் என்றாலும், நாடாளும் தலைவர்களுக்கு மிகவும் இன்றியமையாதது

**அறிவின் பயன்கள் :**

1. அறிவு கேடு வாராமல் காக்கும் கருவி.
2. தீமையை விலக்கும்; நன்மை பயக்கும்.
3. அறிவு உண்மை காண உதவும்
4. அரிய கருத்துக்களையும் கேட்போர்க்கு எளிமையாக்கும்
5. செய்திகளின் நுட்பத்தையும் ஆழத்தையும் அறிய உதவும்
6. உலகத்தையே நட்பாக்கிட உதவும்.
7 அறிவு என்றும் மயங்காது.

ஒருநாட்டிற்குப் பாதுகாப்பு அரண் மலை, காடு, கடல் முதலியன இயற்கை அரண்களாக அமைந்து புறப்பகையிலிருந்து நாட்டைப்

பாதுகாக்கும். ஆயின், சில நேரங்களில் இவ்வியற்கை அரண்கள் கூட எதிர்பார்க்கும் அளவுக்குப் பயன் தாராமல் போகலாம். பகைவரால் என்றைக்கும், எப்படியும் அசைக்கமுடியாத - அழிக்க இயலாத - மிக்க வலிமை வாய்ந்த அரண் ஒன்று அரசனைக் காப்பாற்றும். அதுதான் அறிவு என்னும் பாதுகாப்பு அரண் வருமுன் காப்பதும் அறிவு; வந்தபின்னும் காக்க உதவுவது அறிவு. பகைவரால் அழிக்கமுடியாதது அறிவு. எனவே அரசர்கள் (ஆட்சியர்) சிறந்த அறிவுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

மனம் ஒரு குரங்கு போன்றது. குரங்கு மரத்திற்கு மரம் தாவிக்கொண்டே இருக்கும், ஓரிடத்தில் நிலைகொள்ளாது. அதுபோன்றே மனமும் அலைந்துகொண்டே இருக்கும் மனம் ஒரு மதயானை போன்றது. மதம் பிடித்த யானையை அடக்கப் பாகன் ஓர் அங்குசம் வைத்திருப்பான். கட்டுக்கு அடங்காது செல்லும்போது, அதனால் குத்தி அடக்குவான். அவ்வாறே மனம்போன போக்கெல்லாம் போகாமல் அதனை அடக்கி நம்மைக் காப்பது அறிவு. கெட்டவழிகளில் மனம் இழுத்துச் செல்லுமேல், அறிவு அதனை அடக்கி ஆண்டு நல்வழியில் செலுத்தவல்லது.

இனி, ஆள்கின்றவர்கள் தமக்கே எல்லாம் தெரியும் என்ற ஆணவம் இன்றி சமுதாயத்தில் உள்ள சான்றோர், வல்லுநர், அறிஞர் முதலியோரது ஆலோசனைகளைக் கேட்டல் வேண்டும். அவ்வாறு கேட்கும்போது அறிவைப் பயன்படுத்தித் தனக்கு நேர்மை எனப்படுபவற்றைச் செய்தல் வேண்டும். அறிவுரையும் ஆலோசனையும் கூறுகின்றவர்கள் யார், எத்தகையோர், எந்த இனம், பகைவரா, நண்பரா, இன்னாதவரா இனியவரா என்று ஆட்களைப் பாராது அவர்களின் கூற்றுக்களை வைத்தே முடிவு செய்தல் வேண்டும். சில நேரங்களில் சிறியவர்களிடமிருந்தும் அரிய கருத்துக்கள் வெளிப்படலாம். எனவே, யார் யார் வாய்க் கேட்டாலும், அவ்வாறு கேட்டவற்றுள் எது மெய், எது பொய்? எது பயன்தரும், எது தாராது? என்று அறிவு கொண்டு முடிவு செய்தல் தலைவர்களுக்கும் ஆட்சியாளர்க்கும் இருக்க வேண்டிய பண்பாகும். இதனைத் திருக்குறள் மிக வலிமையாகக் கூறுகிறது. தலைமைப் பொறுப்பில் இருக்கும் தான் தன் கீழ்ப் பணியாற்றும் அலுவலர்களுக்கும், தன்னைக் காணவரும் மக்களுக்கும் சொல்ல வேண்டிய செய்தி மிக நுட்பமானதாக இருந்தாலும், அதனைக் கேட்போர் எளிதில் மனம் கொள்ளுமாறு எளிமைப்படுத்திக் கூறுதல் வேண்டும். அதே நேரத்தில் பிறர் கூறும் செய்திகளையும் ஆலோசனைகளையும் நன்கு ஆராய்ந்து பார்த்து, அவற்றை வறிதே பயனற்றது என்று கேட்ட வளவிலேயே தள்ளிவிடாமல், அவற்றின் ஆழத்தில் அமிழ்ந்துகிடக்கும் நல்லனவற்றைத் தேடிக் கடைப்பிடித்தல் வேண்டும்.

ஒருவனது அறிவு எப்போதும் ஒரே நிலையில் இருக்கும் எனக் கூறல் முடியாது. சில நேரம் அறிவு வேலை செய்யும்; சில நேரம் அறிவு மயங்கும். எளிய மக்களிடம் இத்தன்மையைப் பார்க்கலாம். தமது அறிவினை எப்போதும் விளக்கமாகவே வைத்திருத்தல் வேண்டும்; மலர்தலும் வாடுதலும் அறிவுக்கு வாராமல் பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும். அன்றியும் உலகியல் அறிவும் தேவை. உலகம் என்பது பெரியோரைக் குறிக்கும். சான்றோர் வழியே உலகியல் வழி. இதனைத் தழுவியும் அரசு செல்ல வேண்டும்.

வலுவான அறிவுடையவர்கள் எதிர்காலப் பார்வையுடையவர்கள். பின்வருவனவற்றை முன்னரே தமது மதி நுட்பத்தால் அறிந்து செயல்படுவர் அறிவுடையோர். இப்பண்பு ஆட்சியாளரிடம் அமைதல் மிகவும் இன்றியமையாதது. மேலும் ஆட்சியாளர் அஞ்சுதல் கூடாது என்று கூறும் திருவள்ளுவர், அவர்கள் அஞ்சவேண்டும் இடங்களையும் கூறியுள்ளார் பழி, பாவம், கேடு முதலியன அஞ்சப்படும் தீமைகளாகும். இவற்றிற்கு ஆட்சியாளர் அஞ்சுதல் வேண்டும். அறத்துப்பாலில் திருவள்ளுவர் 'தீவினையச்சம்' என்ற அதிகாரத்தில் கொடிய செயல்களில் ஈடுபடுவதற்கு அஞ்சுதல் வேண்டும் என விளக்கியுள்ளமை அறிக. அஞ்சவேண்டியவற்றிற்கு அஞ்சாமை பேதைமை (மடமை) ஆகும். பின்வரும் குறட்பாக்கள் மனங் கொள்ளத் தகும் :

**"அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்கல் ஆகா அரண்"**

(அற்றம் - கேடு; செறுவார் - பகைவர்)

**"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு".**

(மெய்ப்பொருள் - உண்மை)

**"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்"**

*(தொடரும்...)*

# தனிப்பாடல்கள் திரட்டும் பதிப்பும்

-மொ. மருதமுத்து

உலகின்கண் விளங்கும் ஒவ்வொரு நாட்டையும் அதன்கண் வாழும் மக்களையும், அம்மக்களின் அரசியல், கலையியல், சமயவியல், வாழ்வியல் ஆகியவற்றின் காரணமாக விளங்கும் பண்பாட்டையும் நாகரிகத்தையும் எடுத்தியம்புவன அவ்வந் நாட்டிடத்து வழங்கப்பெறும் இலக்கியங்களேயாகும். பொதுவாக, ஒரு நாட்டின் வரலாற்றினை அறிந்து கொள்வதற்குப் பெருந்துணை புரிவது இலக்கியங்களேயாம்

## தொல்காப்பியரின் இலக்கண மரபு

வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப்பட்ட தென்னகத்தில், சிறப்பாகத் தமிழகத்தில் தொல்காப்பியர் காலந்தொட்டு அகப்பொருளிலும் புறப்பொருளிலும் இலக்கியங்கள் போற்றத்தக்க அளவில் நிலைபெற்றுத் திகழ்கின்றன. இவ்விலக்கியங்கள் அமைந்த முறைகளைத் தொல்காப்பியர்,

> **“அம்மை அழகு தொன்மை தோல்**
> **விருந்து இயைபு புலன் இழைபு”**

என எண்வகையாகப் பிரித்துக்காட்டி, அவை,

> **“பாட்டு உரைநூல் வாய்மொழி**
> **பிசி அங்கதம் முதுசொல் வாழ்த்து”**

என எழுவகையாக யாக்கப்படும் என்றும் இயம்பியுள்ளார்.

## தொடர்நிலைச் செய்யுட்கள்

தொல்காப்பியரின் மேற்கண்ட இவ்விலக்கண மரபை இடைக்காலத்தாரும் பிற்காலத்தாரும் நெகிழவிட்டு வடநூல் முறையை ஓரளவு தழுவிச் சிறுகாப்பிய, பெருங்காப்பிய நெறியை ஒட்டி நூல்களை யாத்துள்ளனர். அவ்வகையில் சிலப்பதிகாரம் முதலான ஐம்பெருங் காப்பியங்களும், கம்பராமாயணம், வில்லிபாரதம் மற்றும் இன்னோரன்ன பிற தொடர்நிலைச் செய்யுள் நூல்களும் அமைந்துள்ளன.

## தொகைநிலைச் செய்யுட்கள்

இனி, முத்தகமாகவும், குளகமாகவும் வரும் செய்யுட்களைத் தொகுத்துச் செய்யும் நூல்வகையும் உளது. அதனைத் தொகைநிலைச் செய்யுள் என்ப. அவை,

"தொகைநிலைச் செய்யுள் தோன்றக் கூறின்
ஒருவர் உரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்
பொருளிடம் காலம் தொழிலென நான்கினும்
பாட்டினும் அளவினும் கூட்டிய வாகும்" (தண்டி - 5)

இவ்வாறாக, பலதுறை அறங்களான இல்லறம், துறவறம், அரசியல், *அமைச்சியல்*, இன்பவியல், குடியியல் *முதலானவற்றைத் தனித்தனியாக* விதந்து தொகுத்துரைக்கும் திருக்குறளும், களவு, கற்பு ஆகிய அகப்பொருள்களிடையே வரும் கிளவிகளையும் துறைகளையும் தனித்தனி விதந்துகூறும் அகப்பொருட் கோவைகளும், கலம்பகம் முதலியவைகளும் வெட்சி முதல் பாடாண் ஈறாக உள்ள புறத்திணைகளின் துறைகளைத் தனித்தனியாக விளக்கித் தொகுத்துரைக்கும் புறப்பொருள் வெண்பாமாலை போன்ற மாலைகளும், தேவார, திருவாசகத் திவ்வியபிரபந்தங்கள், திருப்புகழ் முதலிய அருளிச் செயல்களும் தொகைநூல்கள் எனத்தகும்.

இருப்பினும், சான்றோர்கள் அவை ஏதேனும் ஒரு பொருளைப் பற்றித் தொடர்ந்துள்ளமையால் அவை போன்றவற்றை விடுத்து, அகம்புறம் ஆகிய பொருண்மைகளில் புலவோர் மொழிந்த தனிப்பாக்களைத் திரட்டிக் குறுந்தொகை, நெடுந்தொகை, கலித்தொகை முதலாகிய பல்வேறு பாடல்களை அவற்றின் பொருண்மையைக் கொண்டு தொகுத்து அவற்றிற்கு எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என வழங்கினர். புலவர்களும் புரவலர்களும் இவை தனிப்பாடல்கள் தானே என எளிதாகக் கருதித் திரட்டித் தராதிருந்தால் பெருமைக்குரிய சங்கநூல்கள் நமக்குக் கிட்டியிரா; சங்ககால மக்கள் வாழ்க்கை, பண்பாடு, நாகரிகம், வேந்தர், *சிற்றரசர்*, வேளிர் பெருமக்கள், அவர்தம் வரலாறு ஆகியவற்றை அறியும் வாய்ப்பும் பேறும் நமக்குக் கிடைத்திராமல் போயிருக்குமன்றோ?

இலக்கிய மதிப்பிற்குரிய பத்துப்பாட்டினைப் பாடிய புலவர்களே தொகை நூலாகிய எட்டுத்தொகை நூலுள் காணப்பெறும் தனிப்பாக்களுள் பலவற்றைப் பாடியுள்ளனர். பத்துப்பாட்டினால் பெறுகின்ற பயனைக் காட்டிலும் எட்டுத்தொகை நூல்களாகிய தொகைப்பாக்களால் பெறுகின்ற பயனே, பெரும்பயன் என்பதை யாவரும் அறிவர் இதனால்

தனிப்பாடல்களின் சிறப்பும் பயனும் இலக்கிய மதிப்பும் தெற்றெனப் புலனாகும்.

## தனிப்பாடல்கள்

நூல்வடிவில் தொடர்நிலைச் செய்யுளாகச் செய்யப்பெறாமல் யாதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டுத் தனியாகச் செய்யப்பட்ட பாடல்கள் தனிப்பாடல் என்னும் பெயரைப் பெறும். பாடப்படும் பாடலின் ஒரு கருத்து அதற்குள்ளாகவே முடிவது தனிப்பாடல் எனக் கொண்டு அதனைத் தண்டியலங்காரம், 'முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்' என இலக்கணம் வகுத்தது. தனிப்பாடலை அதன் சிறப்பு நோக்கித் தனியன் என வைணவ நூல்கள் வழங்கும் மணிமேகலைக் காவியத்தைப் பாடிய கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் பாடல்கள் எட்டுத்தொகை நூல்களுள் காணப்பெறுதல் போலக் கவிச்சக்கரவர்த்திகளாகிய கம்பர், ஒட்டக்கூத்தர், தெய்வப்புலமைச் சேக்கிழார் முதலியவர்களும், வில்லிப்புத்தூரார், பரஞ்சோதியார் போன்ற பெரும்புலவர்களும் தாம்தாம் செய்த பெருநூல்களேயன்றி அவ்வப்போது அரிய பல பாக்கள் பாடியிருக்கக் கூடுமென்றெண்ணித் தமிழ்ப்பேரறிஞர்களும், சுவைஞர்களும் பெரிதும் முயன்றுதேடித் தொகுத்தளித்தவைகளே இப்பொழுது நாம் பெற்று மகிழ்ந்து வழங்கும் தனிப்பாடற் றிரட்டு நூல்கள் ஆகும்.

## தனிப்பாடல்களின் வகைகள்

தனிப்பாடல்களை ஒரு புலவர் ஒரு பொருள் மற்றும் பல பொருள்களைப் பற்றிப் பாடிய பாடல்கள்; பல புலவர்கள் ஒரு பொருள் மற்றும் பல பொருள்களைப் பற்றிப் பாடிய பாடல்கள் என வகைப்படுத்தலாம். இவ்வாறு பலரால் பல காலங்களில் பல்வேறிடங்களில் பலபொருளைப் பற்றிப் பாடப்பெற்ற பாடல்களைத் தொகுத்தோர் அவற்றைத் தனிப் பாசுரத்தொகை, தனிச்செய்யுட்கோவை, தனிப்பா மஞ்சரி, தனிச்செய்யுட் கொத்து, தனிப்பா மாலை, தனிப்பாடற் றிரட்டு, தனிசெய்யுட் சிந்தாமணி எனப் பலவாறு பெயரிட்டு வழங்கினர்.

## தனிப்பாடல்களின் பொருண்மைகள்

தனிப்பாடல்கள் ஒரு பெரிய பூஞ்சோலைபோல் விளங்குகின்றன. காதல, கொடை, வீரம், மன்னர், சமீன்தார், பிரபுக்கள், செல்வச் சீமான்கள், வள்ளல்கள், ஏழை எளியவர், மக்கட் பேறற்றோர், அதிக மக்களைப் பெற்றோர், குடும்பநிலை, வாழ்வில் வெற்றி தோல்விகள், இயற்கைச் சூழ்நிலை, இசை, ஞானம், கல்வி, கல்லாமை, விருந்துபசரித்தல், பறவை,

விலங்கு முதலான பல்வேறு உயிரினங்கள், தெய்வம் போற்றல் இப்படி எத்துணை எத்துணையோ பல கருத்துப் பொருண்மைகளில் தனிப்பாடல்கள் பாடப்பெற்றுள்ளன.

## தனிப்பாடல்கள் தோன்றிய வரலாறும் தொகுப்பித்த வரலாறும்

தனிப்பாடல் தோன்றுவதற்குப் பெரும்பாலும் நிலைக்களமாக இருந்தவை கோயில்களும், சமயச் சார்பான மடங்களும், வேந்தர், சிற்றரசர், சமீன்தார்கள் ஆகியோரின் அவைக்களங்களுமே யாகும். சிறுபான்மை பிற இடங்களும் உண்டு. அவை தோன்றுவதற்குப் பெரும்பாலான காரணங்கள் புலவர்கள் தத்தம் கல்விச் செருக்கையும், அரசியற் செல்வாக்கையும் புலப்படுத்த எண்ணிய எண்ணமும் அவ்வப்போது வந்துற்ற இன்பதுன்ப இடையூற்றுணர்ச்சிகளுமேயாம். இத்தகைய இலக்கியச் செல்வமாகிய தனிப்பாக்களைச் சங்ககாலப் பெருமக்கள் தொகுத்தனர் அதனால், நமக்குச் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலான நூல்கள் கிடைக்கப்பெற்றுப் பயனும் பெருமையும் எய்தி நிற்கின்றோம்

அவ்வாறே, இடைக்காலப் பிற்காலச் சான்றோர்கள் முயன்று இப்பொழுதுவரை வழங்கிவரும் தனிப்பாடற் றிரட்டுகளில் உள்ள பாடல்களைத் தொகுத்தளித்திராவிட்டால் 10ஆம் நூற்றாண்டிற்குப்பின் 19ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்த ஒரு சில வேந்தர்கள், சிற்றரசர்கள், சமீன்தார்கள் போன்ற பெருமக்களின் கொடை, செங்கோல், அறம், மறம் முதலிய வரலாறுகளையும், கவிஞர், கலைஞர் போன்றோரின் கல்வி, தொண்டு முதலிய வரலாறுகளையும், அவ்வக் காலத்து வாழ்ந்த மக்களின் நாகரிகப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களையும் நாம் கண்டிருக்க வியலாது. எனவே, தனிப்பட்ட தலைமாந்தரை வைத்துச் செய்த காப்பியத் தொடர்நிலைச் செய்யுள் நூல்களைக் காட்டிலும் தனிப்பாடல் திரட்டுக்கள், ஓராற்றான் மிக்க பயனும் சுவையும் தருவன எனலாம்.

## தனிப்பாடல்கள் - பதிப்புகள் :

சங்ககாலத் தொகை நூல்களுக்குப் பின் பல ஆண்டுகளாகப் பாவலர் பலர் பாடிய பாக்கள் தொகுக்கப்படாது மறைந்து போயின. அழிந்தவை போக எஞ்சிய பாடல்களையும், இடைக்காலப் பிற்காலத் தனிப்பாடல்களையும், தம்மீது பல புலவர்கள் பாடிய தனிப்பாடல்களையும் ஒன்று சேர்த்துத் திரட்டி இராமநாதபுரம் மன்னர் பொன்னுசாமித் தேவரவர்கள், சந்திரசேகர கவிராச பண்டிதரவர்களைக்

கொண்டு உரையெழுதி 'தனிப்பாடற் றிரட்டு' என்னும் பெயரில் இரண்டு பகுதிகளாக வெளியிட்டார்.

பின்னர், முறையூரில் வள்ளலாக விளங்கிய சண்முகஞ் செட்டியாரவர்கள், தம்முடைய அவைப்புலவராயிருந்த கொட்டாம்பட்டிக் கருப்பையாப் பாவலரைக் கொண்டு மேலும் பல பாடல்களைத் திரட்டிச் சந்திர சேகரக் கவிராயர் திரட்டியவற்றோடு கூட்டித் 'தனிச்செய்யுட் சிந்தாமணி' என்னும் பெயரோடு வெளியிடச் செய்தார்.

பொன்னுசாமித் தேவரவர்கள் வெளியிட்ட தனிப்பாடற் றிரட்டை அடிப்படையாகக் கொண்டு அப்புத்தகத்திலுள்ள பல பாடல்களுடன் புதிய பல பாடல்களையும் சேர்த்து 1,2 பாகங்களில் குறிப்புரையுடன் புஷ்பரதச் செட்டியார் பதிப்பித்து வெளியிட்டார். அதன்பின் மதுரை மாநகரில் வாழ்ந்த மு.ரா. கந்தசாமிக் கவிராயர் மேலும் சில பாக்களைத் திரட்டி 3815 பாடல்களாகச் சேர்த்துத் 'தனிச்செய்யுட் சிந்தாமணி' என்னும் பெயராலேயே வெளியிட்டார்.

பொன்னுசாமித் தேவரவர்கள் பதிப்பித்த பற்பல பிரதிகளைக் கொண்டு இன்னுஞ் சில பாடல்களும் சேர்த்து கா.வெ. வரதராஜ முதலியார் மற்றும் வெ பொன்னுசாமி முதலியார் ஆகிய இருவரும் 1291 பாடல்களைக் கொண்டு கி.பி. 1882 இல் 'தனிப்பாடற் றிரட்டு' என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டார்கள்.

இட்டா பார்த்தசாரதி நாயுடு அவர்கள், கா. இராமசாமி நாயுடு அவர்களால் எழுதப்பெற்ற உரையுடன் கூடிய பதிப்பை 'தனிப்பாடற் றிரட்டு - முதற்பாகம்' என்ற பெயரில் 1908லும், அந்நூலின் இரண்டாம் பாகத்தை 1911லும் வெளியிட்டார். B. இரத்தின நாயகர் சன்ஸ் அவர்களால் 'பல வித்துவான்கள் பாடிய தனிப்பாடற் றிரட்டு' என்ற பெயரில் கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்களது உரையுடன் கூடிய முதல் பாகத்தை 1939இல் வெளியிட்டனர். இப்பாடல்களானது, வரலாற்று முறைக்குத் தக்கவாறு வரிசைபடுத்தப்பெற்று விளக்கவுரையுடன் கொடுக்கப்பட்டுள்ளது இதன்கண் சரித்திரமுறைக்கேற்றவாறு 17ஆம் நூற்றாண்டுவரை வாழ்ந்த 35 புலவர்களின் வரிசையும், 870 அரிய பாடல்களும் தொகுக்கப்பெற்றுள்ளன. 1955இல் வெளியான இந்நூலின் இரண்டாம் பாகத்தில் அதற்குப் பிற்பட்ட 58 பெரும்புலவர்களின் பாடல்களும், புலவர் பெயர் குறிப்பிடாத பாடல்களுமாக 865 பாடல்கள் சேர்க்கப் பெற்றுள்ளன.

ஆயினும், மேற்கண்ட பல்வேறு திரட்டு நூல்களில் சேராத நூற்றுக்கணக்கான பாடல்கள் பலவிடங்களிலும் வழங்கிக் கொண்டிருந்தன. சிலர், செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில் முதலிய திங்களிதழ்களில் தனிப்பாடல்கள் பலவற்றை வெளியிட்டனர். திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப் பொறுப்பாளர் வ. சுப்பையா பிள்ளையவர்கள் தனிப் பாடற் றிரட்டு, தனிச்செய்யுட் சிந்தாமணி ஆகியவற்றில் இடம்பெறாமல் மேற்சொன்ன திங்களிதழ் முதலியவற்றில் வெளியாகிவுள்ள பாடல்களையும், தற்காலப் புலவர் பெருமக்களின் சிறந்த பாடல்களையும் தொகுத்து மேற்படி பாடல்திரட்டுகளோடு இணைத்துத் 'தனிப்பாடல் திரட்டு' என்ற பெயரில் ஐந்து பாகங்களில் ஏறக்குறைய 4500 பாடல்களை சு.அ. இராமசாமிப் புலவரவர்களின் இன்றியமையாத குறிப்புரையோடு வெளியிட்டார்.

இவையன்றிச் சங்கத் தொகை நூல்களில் காணப்பெறாமல் தொல்காப்பியம் முதலிய நூல்களின் உரையிடத்தே பயின்றுள்ள பாக்களையும், அவை போன்ற பிறவற்றையும் தொகுத்துப் பேராசிரியர் S. வையாபுரிப் பிள்ளை அவர்கள் 'புறத்திரட்டு' என்ற ஒரு நூலும், அவ்வாறே, பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள் 'பெருந்திரட்டு' என்றதொரு நூலும் வெளியிட்டுள்ளனர்.

கலைச்செல்வி என்பவர் 'தனிப்பாடல் திரட்டு' என்ற பெயரில் 30 புலவர்கள் பாடிய தனிப்பாடல்களைப் பதம்பிரித்துப் பொழிப்புரை மற்றும் பதவுரையோடு 1960இல் வெளியிட்டுள்ளார். சென்னை அரசினர்க் கீழ்த்திசைச் சுவடி நூலகமானது தி. சந்திரசேகரன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு, அந்நூலகத்திலுள்ள ஓலை மற்றும் தாள்சுவடிகளிலுள்ள தனிப்பாடல்களைத் (1057 பாடல்கள்) 'தனிப்பாடற் றிரட்டு' என்ற பெயரில் 1960இல் வெளியிட்டுள்ளது. இந்நூலின்கண் அடங்கிய செய்யுட்கள் இதுகாறும் வெளியிடப் பெறாததாகும்.

தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையம், அந்நூலக ஓலைச் சுவடிகளிலுள்ள தனிப்பாடல்களை, 'தனிப்பாடற் றிரட்டு - பொழிப்புரையுடன்' என்ற பெயரில் இரண்டு பாகங்களாக திரு. ச பாலசுந்தரம் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1967, 1969 ஆகிய ஆண்டுகளில் வெளியிட்டுள்ளது. இதில் முதல் பாகத்தில் 216 பாடல்களும், இரண்டாம் பாகத்தில் 256 பாடல்களும் இடம்பெற்றுள்ளன வித்துவான் V. அருணாசலம் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு, டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகம் அந்நூலக ஓலைச் சுவடிகளிலுள்ள

தனிப்பாடல்களைத் 'தனிப்பாடல்கள்' என்ற பெயரில் 1983இல் வெளியிட்டுள்ளது.

சென்னை, ஸ்டார் பிரசுரமானது, பாலூர் கண்ணப்ப முதலியாரைக் கொண்டு 'தனிப்பாடல்கள்' என்னும் நூலினை வெளியிட்டுள்ளது; இந்நூல் 96 பக்கங்களைக் கொண்டுள்ளது. புலவர் அ. மாணிக்கம் என்பவரை உரையாசிரியராகக் கொண்டு சென்னை, பூம்புகார் பிரசுரம் 'தனிப்பாடல் திரட்டு' என்ற பெயரில் இருதொகுதிகளை 1977இல் வெளியிட்டுள்ளது.

'தனிப்பாடல் திரட்டு மூலமும் தெளிவுரையும்' என்ற நூலினை, சிவ. கன்னியப்பன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு புலவர்களின் வாழ்க்கைக் குறிப்பை அவர்களின் பாடலுக்கு முன் தந்து அறிமுகப்படுத்தியிருப்பது பாராட்டிற்குரியது. சென்னை, வர்த்தமானன் பதிப்பகமானது திரு.வ.ஜோதி என்பாரை ஆசிரியராகக்கொண்டு, 'தனிப்பாடல் திரட்டு மூலமும் விளக்கவுரையும்' என்னும் பெயரில் 356 பக்கங்களைக் கொண்ட நூலினை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு, தமிழ்நாட்டில் தனிப்பாடல்கள் பற்றிய நூல்கள் பல உலவுவன, தமிழ்மொழியின் தெய்வத் தன்மைக்கும், தொன்மைக்கும், வன்மைக்கும், புலவர் பன்மைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கி நம் வாழ்விற்கு வழிகாட்டுவனவாக இலக்குகின்றன.

அன்பு அச்சகம், மதுரை. ✆ 741116